பக்கங்கள்: பத்து

Registered as a News Paper

தந்தை செல்வா நூலகம்
01 JUN 1999

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 14 வள்ளுவர் ஆண்டு2030 வைகாசி 17 திங்கட்கிழமை (31-05-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 159

## யாழ். சிவில் நிர்வாக நிலைமை குறித்து கொழும்பில் இன்று ஆராயப்படும்

கொழும்பு, மே 31

குடாநாட்டின் சிவில் நிர்வாக நிலைமை குறித்து இன்று கொழும்பில் நடைபெறும் மாகாண பாதுகாப்புக் கவுன்ஸில் கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு பாதுகாப்பு நிலவரம் தொடர்பாக ஆராய்வதற்காக மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் வடக்கு-கிழக்கு மாகாண அரச அதிபர்கள், பாதுகாப்பு உயர் அதிகாரிகள் மாகாண சபை அதிகாரிகள் ஆகியோர் பங்கு பற்றுவர்.

இந்தக் கூட்டத்தில் குடாநாட்டுச் சிவில் நிர்வாகத் தடை, வன்னி நிவாரணப் பணிகள் உட்பட பல விடயங்கள் ஆராயப்படவிருக்கின்றன. (இ-3-21)

## கொடிகாமம் சம்பவம்: காயமடைந்த ஆறுபேர் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், மே31

வெசாக் தினத்தன்று கொடிகாமத்தில் இசை நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் காயமடைந்த ஆறுபேர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் வீதியைச் சேர்ந்தவர்களான ஆர். பிரதீபன் (வயது 10), எம். சர்மிளா (வயது 18), கே. குணபூசனி (வயது 63), கே. கௌதமி (வயது 30), பி. நாகேஸ்வரி [வயது 40], வரணியை சேர்ந்த ரீ. சிவசரவணன் ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

கிரனேட் வீசப்பட்டதாக முன்னர் தகவல் வெளிவந்த

[10 ஆம் பக்கம் பார்க்க]

# குடாநாட்டில் புனரமைப்பு பணிகள்: ஐரோப்பிய கூட்டமைப்பு அதிருப்தி!

## தொடர்ந்து உதவி வழங்க உறுப்பு நாடுகள் மறுப்பு

கொழும்பு, மே 31

யாழ். குடாநாட்டைப் புனரமைக்க ஐரோப்பிய சமூகக் கூட்டமைப்பு நாடுகளால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிதி உதவி இலங்கை அரசாங்கத்தால் சரிவரப் பயன்படுத்தப்படவில்லை என்று ஐரோப்பிய சமூக கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அரசாங்கம் முன் வைத்த தீர்வுப் பொதி மற்றும் திட்டங்கள் காரணமாக யாழ். மாவட்டத்தில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்கு தமது அமைப்பின் அங்கம் வகிக்கும் நாடுகள் தாராளமாக உதவி வழங்கின என்றும்—

ஆனால் அங்கு புனரமைப்புப் பணிகள் சரிவர மேற்கொள்ளப்படவில்லை என்றும்—

அங்கு நிலைமை சீராகாது விட்டால் தொடர்ந்து உதவிகளை வழங்க முடியாது போகும் என்றும் — அந்த அமைப்பு இலங்கைக்கு தெரிவித்துள்ளது.

[10 ஆம் பக்கம் பார்க்க]

## ரெலோ முகாம் பகுதியில் சூட்டுச்சத்தம்

வவுனியா, மே 31

வவுனியா குருமண்காட்டுப் பகுதியில் அமைந்துள்ள ரெலோ அமைப்பின் முகாம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஒரு மணியளவில் துப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## எழுதுமட்டுவாழ் பகுதியில் குண்டுவெடிப்பு

தென்மராட்சி, மே 31

எழுதுமட்டுவாழ் நாகர் கோயில் வீதியில் நேற்றுக் காலை 10.00 மணியளவில் குண்டு வெடிப்புச் சம்பவம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ராஸிக்கின் பூதவுடலுக்கு வரதராஜப்பெருமாள் அழுதபடி அஞ்சலி!

மட்டக்களப்பு, மே 31

மட்டக்களப்பு நகரில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட தேசிய துணைப்படையின் பொறுப்பாளர் ராஸிக்கின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட வடக்கு—கிழக்கு மாகாண சபை முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் ராஸிக்கின் பூதவுடலுக்கு அழுதவண்ணம் அஞ்சலி செய்தார்.

வரதராஜப் பெருமாள் பலத்த பாதுகாப்புடன் கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு வந்திருந்தார்.

ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் யாழ். மாவட்ட பொறுப்பாளர் எஸ். சுபத்திரனும் அவருடன் வந்திருந்தார்.

வரதராஜப் பெருமாள் 15 நிமிடம் அங்கு தங்கியிருந்து அஞ்சலி செலுத்திவிட்டு உடன் கொழும்பு திரும்பிவிட்டார்.

இந்தியாவில் இருந்து திரும்பிய பின்னர் அவர் கலந்து கொண்ட முதலாவது பொது வைபவம் இதுவாகும்.

[10 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகள் உறுப்பினரான அரசப்பன் என்பவரே தாக்குதல் நடத்தியவராம்

மட்டக்களப்பு, மே 31

மட்டக்களப்பு நகரின் மத்தியில் தேசிய துணைப்படையின் பொறுப்பாளர் ராஸிக் மற்றும் இருவர் கொலைப்படக் காரணமான தற்கொலைக் குண்டுதாரி விடுதலைப் புலிகள் உறுப்பினரான அரசப்பன் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தேசிய துணைப்படை தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பில் உள்ள ஹோட்டல் ஒன்றில் அவர் சில மாதங்களுக்கு முன்னர் வேலை செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் — தற்கொலைக் குண்டுதாரியின் உடல் உறுப்புகளான தலை, இரு கால்கள், ஒரு கை என்பன மரண விசாரணையின்போது சமர்ப்பிக்கப்பட்டன என்றும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உதவி வழங்கும் நாடுகள் கூட்டம் நடைபெறும் போது எதிர்ப்பு இயக்கம்

### ஜேர்மனியிலுள்ள தமிழர் அமைப்புகள் முடிவு

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் ஜேர்மனியில் நடைபெறவிருக்கின்றது.

அந்தக் கூட்டம் நடைபெறும் சமயம் அங்கு பேரணிகளையும், உண்ணாவிரதத்தையும் மேற்கொள்ள தமிழர் அமைப்புக்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

தமிழர் சுய நிர்ணய ஒற்றுமை அமைப்பு, உலகத்தமிழர் இயக்கம், சர்வதேசமனித உரிமைகள் மையம் ஆகியன இணைந்து இந்தப் போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளன. [இ-3-21]

## அகதிகள் வெளியேற்றப்பட்டதை அடுத்து சர்வதேச தொண்டர் நிறுவனங்களும் மடுவிலிருந்து வெளியேறுகின்றன

மடுத்தேவாலயப் பகுதியில் இருந்து அகதிகள் அப்புறப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அங்கு பணிபுரிந்த சர்வதேசத் தொண்டர் அமைப்புக்களும் வெளியேறுவதாகக் கூறப்பட்டது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகள் தச்சனாமருதமடுவிலுள்ள அகதி முகாமுக்குச் சென்றுள்ளதாகவும்—

ஏனைய அமைப்புக்களின் அதிகாரிகள் முருங்கனுக்குச் சென்றுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

அகதிகளுக்கான ஐ நா தூதரகம், எம் எஸ். எவ், ஐக்கிய ராஜ்ஜிய சிறுவர் பாதுகாப்பு நிதியம், ஒக்ஸ்பாம் போன்ற அமைப்புகள் மடுவில் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## தமிழர்களைப் பாதுகாக்க மலையக தமிழர் அமைப்பு

கொழும்பு, மே 31

மலையகப் பகுதியில் அதிகரித்துவரும் தமிழ்மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை முறியடிக்க மலையகத் தமிழர் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

'தமிழர் நல்வாழ்வு ஒன்றியம்' என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள இந்த அமைப்பு மலையகத்தில் உள்ள தமிழர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவிருக்கின்றது.

மலையகத்தில் வாழும் தமிழர்களுக்கு எதிரான போராட்டங்களைப்பேரினவாதக்குழுக்கள் முடுக்கி விட்டதை அடுத்தே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (இ-3-ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வலி. தென் மேற்கில் திட்டங்களுக்கு நிதி

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் மூலதன நிதி ஒதுக்கீட்டில் இவ்வருடம் ஐந்து லட்சம் ரூபா செலவில் பல அபிவிருத்தித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

சந்தைகள், சனசமூக நிலையங்கள், முன்பள்ளி தளபாட திருத்த வேலைகள், ஒழுங்கைகள், வீதிகள் புனரமைப்பு போன்ற பல பணிகளுக்கென மேற்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபையின் தலைவர் வெ. அன்ரன் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் வடக்கு வளர்மதி சனசமூக நிலையம், மாதகல் நாவலர் சனசமூக நிலையம் ஆகியவற்றின் புனரமைப்பு பணிகளுக்கென தலா ஒரு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நவாலி பிரசாத் சந்தை புனரமைப்புக்கு 60 ஆயிரம் ரூபாவும், நவாலிபுலவர்வீதி, நவாலி கல் ஒழுங்கை ஆகியவற்றின் திருத்த வேலைகளுக்கு தலா 60 ஆயிரம் ரூபாவும், மாதகல் காந்திஜி முன்பள்ளி, கட்டுடை மகாஜனா முன்பள்ளி, கட்டுடை முன்பள்ளி ஆகியவற்றின் தளபாட திருத்த வேலைகளுக்கென தலா 40 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-152)

## விளையாட்டு விழா

கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கத்தின் கச்சாய் வெள்ளாம் போக்கட்டி மழலைகள் பூங்கா சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் புதன் கிழமை பி. ப. 1.00 மணிக்கு மழலைகள் பூங்கா மைதானத்தில் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் க. பாஸ்கரன் தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக பனை அபிவிருத்திச் சபை விரிவாக்க அலுவலர் வீ.ஜி. தங்கவேலும் கௌரவ விருந்தினர்களாக கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய அதிபர் க. கந்தையா, யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மாவட்டச் செயலாளர் சு. சிவசுப்பிரமணியம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் கா. மணியமும் கலந்து கொள்வர். (ஐ-117)

# குளவி குத்தி சீவல் தொழிலாளி ஆஸ்பத்திரியில்

நெல்லியடி, மே 31

பனையில் ஏறிய சீவல் தொழிலாளி ஒருவர் குளவியால் கடியுண்டு மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று கரவெட்டி கிழக்கில் இடம் பெற்றது.

கரவெட்டி கிழக்குயார்க்கருவைச் சேர்ந்த முருகன் கலைமாறன் (வயது 28) என்பவரே உடல் முழுவதும் குளவிகளினால் கடியுண்டவராவார். (இ-109)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மே 31

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை 'உதயன்' நிறுவனத்தின் அனுசரணையுடன் பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம் பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

★ 4 மணி — பெண்கள் பிரிவு — அரியாலை ஐக்கிய வி. க. அணி எதிர் பல்கலைக் கழக 'பி' அணி.

★ 5 மணி — ஆண்கள் பிரிவு — பற்றீஸியன் வி. க. அணி எதிர் ஜொலிஸ்ரார் வி. க. அணி.

(இ-3)

# மேசன், தச்சுத் தொழிலில் பயிற்சி அளிக்கத் திட்டம்

யாழ். மாவட்டத்தில் தேசிய தொழிற் பயிற்சி அதிகாரசபையினால் மேசன் மற்றும் தச்சுத்தொழிற்றுறைகளில் பயிற்சித் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு மேற்படி பயிற்சித் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

சுமார் ஆறு மாதங்கள் தொடர்ச்சியாக நடைபெறும் இப்பயிற்சியில் பங்கு பற்றும் பயிற்சியாளர்களுக்கு மாதாந்தம் நானூற்றி ஐம்பது ரூபா ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பயிற்சியின் முடிவில் தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையால் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பயிற்சியில் பங்குபற்ற விரும்புபவர்கள் தமது பகுதி கிராம உத்தியோகத்தர் ஊடாக பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பம் செய்யலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [ஐ9-9]

## கட்டடம் திறந்து வைப்பு

கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ்கலவன் பாடசாலையில் ஐ. நா. அபிவிருத்தித்திட்டநிறுவனத்தால் 5 இலட்சம்ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டபுதிய கட்டடம் சமீபத்தில் வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் சி. சிவராசாவினால் திறந்து வைக்கப்பட்டது. (ஐ-109)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



அமரர்

## செல்லத்துரை பாலசிங்கம்

(சிங்கர்)

(பெட்டா எசன்ஸ் சப்பிளையேர்ஸ், கொழும்பு)

தோற்றம்: 12—02—1937

மறைவு: 02—05—1999

தோன்றலும் மறைதல் தானும்
தொல்விதிப் பயனதாகும்
மண்டாவர்க் காயிரங்கி
மனத்திடைத் துயரைத் தேக்கி
ஆண்டு தோறும் அழுவதாலே
ஆன பயன் யாதும் இல்லை!

ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனை வேண்டுவதே
அன்னார்க்கு யாம் செய்யும் அஞ்சலியாம்.

பிரமாதி வருடம் சித்திரைத் திங்கள் 19 ஆம் நாள் வைகாசிமாதம் (02-05-99) ஞாயிற்றுக்கிழமை தாண்டவ மூர்த்தியின் திருவடிக் கமலம் சென்றடைந்த எமது அன்புத் தெய்வத்தின் 31 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (01-06-1999) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்பாக வேண்டுகின்றோம்.

"ஓம் சாந்தி"

மனைவி, மக்கள்,
மருமகன், பேரர்கள்.

இராஜ வீதி,
வடநீர்வை,
நீர்வேலி.

(66232)

நேற்று நடைபெற்ற
இம்மாதத்திற்கான
மாதாந்த பயிற்சிப்
பரீட்சைவினாத்தாள்கள்
விடைகளுடன்
பெற்றுக்கொள்ளலாம்.
BOND
யாழ் நகர்
[66231]

லிபேட்டி
தியேட்டர்
அச்சுவேலி
பிரபு - தேவயானி
நடித்த
கும்மிப்பாட்டு
காட்சிகள்; 10.30, 2.30
(பழைய நேரப்படி)
Fax No. 070-212223
FOREIGN T.P. No.
0094 -70 -212223
(66140)

நாகம்ஸ்
சுன்னாகம்.
இன்று
அர்ஜுன் - ரஞ்சிதா
கவுண்டமணி - செந்தில்
நடித்த
ஜெய்ஹிந்த்
காட்சிகள்: 11-00, 2-30
(புதிய நேரம்)
(66192)

ராஜா
யாழ்ப்பாணம்
விஜய் - தேவயானி
ரம்பா - மணிவண்ணன்
செந்தில்
மற்றும் பலர் நடித்த
நினைத்தேன்
வந்தாய்
10-30, 2-00, 5-00
[சி/7708]

# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை சண்முகலிங்கம்

(போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சண்முகலிங்கம் 30-05-99 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நீர்வேலி தெற்கைச் சேர்ந்த அமரர்களான பொன்னுத்துரை - பார்வதிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மகனும் நாயன்மார்க்கட்டு அமரர் காசிலிங்கம் - ஞானமணி ஆகியோரின் மருமகனும் கௌரீஸ்வரியின் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் சாதனியின் பாசமிகு தந்தையும் அமரர் தனலட்சுமி, பரணிமலர், சரவணபவானந்தன், நிற்குணானந்தன், ஜெயலட்சுமி, விஜயலட்சுமி, ஜெயராணி, சற்குணநாதன், ஆறுமுகசாமி ஆகியோரின் சகோதரரும் உமாவதி, தனலக்சுமி, ராமகிருஷ்ணன், அமரர் சிவபாலன் (மாம்பழம்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30-05-99 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு அவரது நாயன்மார்கட்டு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
கௌரீஸ்வரி
(மனைவி)

ஆடியபாத வீதி,
நாயன்மார்கட்டு.

(66233)

திருமதி

## ஆறுமுகம் சிவனேசமணி

(இணுவில்)

இணுவில் மேற்கை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட திருமதி ஆறுமுகம் சிவனேசமணி அவர்கள் 28 - 05 - 1999 வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா — அன்னமுத்து ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரை—சின்னமேனை ஆகியோரின் அன்பு மருமகளும், சின்னத்துரை — ஆறுமுகம் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி ஸ்ரீ. பிறேமினி (கனடா), திருமதி க. சிவானந்தகௌரி (ஜேர்மனி), திருமதி கி. பிறேமதர்சினி (கனடா), ஆ. பிறேமானந்தா, ஆ. நிர்மலானந்தன் (பிரான்ஸ்), ஆ. சர்வானந்தன் (பிரான்ஸ்), திருமதி ச. பாமினி, ஆ. சதானந்தன், ஆ. லோஜினி (யா / வேம்படி மகளிர் கல்லூரி), ஆ. விமலானந்தன் (யா / இணுவில் மத்திய கல்லூரி), ஆ. கிருஷ்ணானந்தனி (யா / இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வி. தங்கம்மா, ப. சிவகாமிப்பிள்ளை, க. கணேஸ்வரன், காலஞ்சென்ற க. மகாதேவன், க. கார்த்திகேசு, ஆ. சிவேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீஸ்கந்தராஜா (கனடா), கனகலிங்கம் (ஜேர்மனி), சிவனேசன் (கனடா), சந்திரகுமார் (இணுவில்) சிவானந்தபவானி ஆகியோரின் அன்பு மாமியாரும், மயூரன், சதீஸ், ராகுல் (கனடா), கஜானன், கபிலன் (ஜேர்மனி), கீர்த்தன், ஹரிசன் [கனடா] சிவசேகர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கடந்த [29 - 5 - 1999] சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் இணுவில் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
சி. ஆறுமுகம்
[இளைப்பாறிய கிராம அலுவலர் — கணவன்]

"ஆனந்த நிம்மதி",
இணுவில் மேற்கு,
இணுவில்.

[66234]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாட்டில் மூன்று நகரங்களில் சக்தி மிக்க வெடி குண்டுகள் மீட்பு!

## ஒரே சமயத்தில் வெடிக்க இருந்தன

சென்னை, மே 31

தமிழ்நாட்டில் மூன்று இடங்களில் ஒரேநேரத்தில் வெடிக்க தயாராக பொருத்தி வைக்கப்பட்டிருந்த பெரும் வெடிகுண்டுகளை பொலீஸார் நேற்றுக்காலையில் மீட்டுள்ளனர்.

பொலீஸாரின் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் பெரும் அனர்த்தங்கள் தவிர்க்கப்பட்டிருப்பதாக முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னை திருச்சி, கோவை ஆகிய நகரங்களின் பிரதான இடங்களில் இந்தக் குண்டுகள் வைக்கப்பட்டிருந்தன. குண்டுகள் காணப்பட்ட இடங்களில் 'அல் உமா' என்று எழுதப்பட்ட துண்டுப் பிரசுரங்களும் மீட்கப்பட்டிருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர்.

சிறையில் உள்ள 'அல் உமா' தீவிரவாதிகள் துன்புறுத்தப்படுவதாகவும் அவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்றும் —

அத்துடன் ஆர். எஸ் எஸ். இந்து முன்னணி ஆகிய இயக்கங்கள் தடை செய்யப்பட வேண்டும் என்றும்—

அந்தப் பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குண்டுகள் மீட்கப்பட்டமை தொடர்பாக முதல்வர் கருணாநிதி நேற்று சென்னையில் அறிக்கை ஒன்றை விடுத்தார்.

நாட்டின் எல்லையில் இந்திய இராணுவத்தினர் உயிரையே பணயம் வைத்து போராடிக்கொண்டிருக்கும் இந்த சமயத்தில் பொது இடங்களில் குண்டுகளை வைக்கும் முயற்சியும், அதற்கு ஊக்கமளிப்பதும் பெரும் தேசத்துரோகம் ஆகும் என்று கருணாநிதி தெரிவித்துள்ளார். (ஐ)

## மேலும் விமானங்கள் விரைவு

வொஷிங்ரன், மே 31

யூகோஸ்லாவியா மீதான நேட்டோவின் வான் தாக்குதலை விரிவுபடுத்தும் முகமாக மேலும் 68 அமெரிக்க விமானங்கள் நேட்டோவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**உலக அரங்கில்**

யூகோ மீதான தாக்குதலில் ஈடுபடும் விமானங்களின் எண்ணிக்கை தற்பொழுது எழுநூற்று அறுபத்தொன்பதாக உயர்ந்துள்ளது. (ஐ-க)

**வான் தாக்குதலை நிறுத்தும்**

## பாகிஸ்தான் கோரிக்கையை இந்தியா நிராகரித்தது

புதுடில்லி, மே 31

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் — கார்கில பிரதேசத்தில் இந்திய விமானப்படை மேற்கொண்டு வரும் குண்டுத்தாக்குதல்களை நிறுத்த வேண்டுமென பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் ஷெரீப் விடுத்த வேண்டுகோளை இந்தியப் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய் மறுத்து விட்டார்.

நேற்றுமுன்தினம் காலை பாகிஸ்தானிய பிரதமருடன் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டபோதே பிரதமர் வாஜ்பாய் மேற்கண்ட விடயத்தை அவரிடம் தெரிவித்தார்.

பிரதமர் நவாஷ் ஷெரீப்புடன் தான் பேசிய விடயங்கள் குறித்து புதுடில்லியில் இடம்பெற்ற அனைத்துக் கட்சிப்பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் பிரதமர் வாஜ்பாய் விரிவாக எடுத்துக் கூறினார். (ஐ-7)

## சுரங்கப் பாதையில் பெரும் தீ விபத்து

வியன்னா, மே 31

ஒஸ்ரியாவில் பிரதான சுரங்கப் பாதையில் திடீரென ஏற்பட்ட தீவிபத்தினால் 40 பேர் வரை காயமடைந்துள்ளனர். 50-க்கும் மேற்பட்ட வாகனங்கள் எரிந்து போயுள்ளன.

ஒஸ்ரியாவின் தென்கிழக்கு நகர் ஒன்றில் நேற்று முன்தினம் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

லொறி ஒன்றுடன் கார் ஒன்று மோதியதால் ஏற்பட்ட தீ அருகில் சென்ற ஏனைய வாகனங்களுக்கும் பரவியது. இதனால் சுரங்கப் பாதையின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்துள்ளது.

கடும் புகை மூட்டம் நிலவுவதை அடுத்து மீட்புப் பணிகளை மேற்கொள்ள முடியாது மீட்புப் பணியாளர்கள் திண்டாடுகிறார்கள் [ஐ-ச]

## இனந்தெரியாதோரால் அ. அட்டைகள் பறிப்பு

சாவகச்சேரி மே 31

பருத்தித்துறையிலிருந்து சாவகச்சேரி நோக்கி வந்து கொண்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறை டிப்போபஸ்ஸில் பயணம் செய்த 12 பயணிகளின் அடையாள அட்டைகள் துன்னாலைக்கும் சரசாலைக்குமிடையில் உள்ள சன நடமாட்டம் குறைந்த காட்டுப் பகுதியில் வைத்து இனந்தெரியாதோரால் அபகரிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் முற்பகல் 11.45 மணிக்கு இச் சம்பவம் இடம் பெற்றது.

அடையாள அட்டைகளைப் பறிகொடுத்தவர்கள் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117-31)

## யாழ். இரத்த வங்கிக்கு குளிர்சாதனப் பெட்டிகள்

யாழ்ப்பாணம், மே 3

யாழ் போதனாவைத்திய சாலை இரத்தவங்கிக்கு, கொழும்பு தலைமை இரத்த வங்கி இரண்டு குளிர்சாதனப் பெட்டிகளை அனுப்பி வைத்துள்ளது.

போதிய குளிர்சாதனப் பெட்டி இல்லாததால் இரத்தத்தை சேகரிக்கமுடியாத நிலையில் யாழ். போதனா சாலை இரத்தவங்கி பெரும் நெருக்கடி நிலையில் இயங்கி வந்தது.

இது பற்றி கொழும்பு பிரதான இரத்த வங்கியுடன் பல தடவை தொடர்பு கொண்டதை அடுத்து தற்போது இக்குளிர்சாதனப் பெட்டிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதனை அடுத்து போதனா வைத்தியசாலையின் தேவைக்கேற்ப ஓரளவு இரத்தத்தை சேகரித்து வைக்க யாழ். இரத்தவங்கிக்கு உதவியாக அமைந்துள்ளது. (ஐ-15)

**வேம்பொடுகேணி பாடசாலை**

## மர நிழலில் கல்வி கற்கும் ஆரம்ப பிரிவு மாணவர்கள்

தென்மராட்சி, மே 31

பளை வேம்பொடுகேணி சீ.சீ.த.க பாடசாலை ஆரம்பப் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் மர நிழலிலும், கற்குவியல்களிலும் இருந்து தமது பாடங்களைக் கற்கும் அவலநிலை காணப்படுகிறது.

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள வகுப்பறைக் கொட்டிலுக்குள் தாரா உண்ணி பெருமளவு காணப்படுவதாலும் மாணவர்கள் வகுப்பறைகளுக்குள் செல்ல தயக்கம் காட்டுவதாலும் மரநிழல்களிலும், கற்குவியல்களிலும் பாடங்கள் நடத்தப்படுகின்றன.

நூறு அடி நீளமான ஆரம்பப் பிரிவுக்கான வகுப்பறைக் கொட்டிலில் உள்ள தாரா உண்ணியை அழிக்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் — கல்வி வலய அதிகாரிகள் நேரில் வந்து பார்வையிட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாட்டார்களா என்றும் பெற்றோர் பலர் கவலையுடன் தெரிவித்தனர். (ஐ-117)

## மைதானத்தில் சிரமதானம்

சாவகச்சேரி, மே 31

மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தினரால் மோகனதாஸ் விளையாட்டு மைதானம் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது. [ஐ-31]

## பணம் வழங்கவில்லை

யாழ்ப்பாணம், மே 31

மறவன்புலோ பழைய முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் திருப்பணி வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அடியார்கள் மனமுவந்து வழங்கிய அன்பளிப்புகளினாலும் பூசகரது முயற்சியினாலுமே திருப்பணி வேலைகள் நடைபெறுவதாக அறிவிக்கப்படுகிறது

உதயன் 2-4-99 இதழில் மேற்படி ஆலயம் தொடர்பாக வெளிவந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டது போல ஆலயத்திருப்பணிச் சபைத் தலைவரிடம் அடியார்கள் 40 ஆயிரம் ரூபாவை ஒப்படைக்கவில்லை என்றும். அடியார்கள் சேர்ந்து மேற்படி தொகையை அன்பளிப்புச் செய்ய மட்டுமே ஒப்புக்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது குறித்த பணம் இன்னும் வசூலிக்கப்படவில்லை என்றும் அறிய வருகிறது. (அ)

## மருந்து வந்தது

நெல்லியடி, மே 31

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கு, மலேத்தியோனுக்குப் பதிலாக 'பனித்திரோதியான்' என்னும் மருந்து. யாழ் பிராந்திய பிரதி சுகாதாரப் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை—

மந்திகை மருந்துவமனையின் 'எக்ஸ்றே' கதிர்பிரிவிற்கும். புதிய எக்ஸ்றே கதிர் இயந்திரம் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டு கையளிக்கப்பட்டது (ஐ 109]

## அணைக்கட்டு திருத்தம்

தனங்கிளப்பு பகுதியில் அமைந்துள்ள இலந்தைக்கிடல், சங்கு பிட்டி, முள்ளிப்பிட்டி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய அணைக்கட்டு தென்மராட்சி நிறுவனத்தின் நிதிஉதவியுடன் ஜேர்மன் விவசாய சம்மேளனத்தினால் திருத்தப்பட்டு வருகின்றது [க-102]

## ராஸிக்கின் படுகொலைக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 31

மட்டக்களப்பில் வைத்து தேசிய துணைப்படையின் பொறுப்பாளர் ராஸிக் தற்கொலைத் தாக்குதல் மூலம் கொல்லப்பட்ட சம்பவத்தை ஈ.பி.ஆர்.எல்.எவ். கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் செயலாளர் நாயகம் க. சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முன்னாள் மத்தியகுழு உறுப்பினரும், பின்னர் சிறீலங்கா இராணுவத்தில் இணைந்து செயற்பட்டு வந்தவருமான ராஸிக் அவர்கள் புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 29-05-99 அன்று கொல்லப்பட்டார்.

1983 இல் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மாணவர் அமைப்பான ஈழ மாணவர் பொதுமன்றத்தில் இணைந்து செயற்பட்ட அவர் பின்னர் ஆயுதப்பயிற்சி பெற்று அதன் மக்கள் விடுதலைப் படையிலும் முன்னணி அங்கத்தவராக இருந்து செயற்பட்டவர்.

1986 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏனைய தமிழ்க்கட்சிகளைத் தடை செய்து தாம் தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் எனச் செயற்பட்ட போது அவர்களின் ஜனநாயக விரோத செயற்பாடுகளை எதிர்ப்பதில் முன்னின்று செயற்பட்டார்.

1990 இல் ஈ.பி.ஆர்.எல்.எவ் தனது ஆயுத செயற்பாடுகளை நிறுத்தி முழுமையான ஒரு ஜனநாயகக் கட்சியாக செயற்பட்டு வந்த வேளையிலும் அதன் ஜனநாயக நடவடிக்கைகளிலும் அவர் முழுமையாக ஈடுபட்டு வந்தார். ஆனால் அவரின் ஜனநாயக நடவடிக்கைகளுக்கு புலிகளிடம் இருந்து பாரிய மரண அச்சுறுத்தல்கள் ஏற்பட்டதால் புலிகளை ஆயுதரீதியில் எதிர்கொண்டு அவர்களைப் பலவீனப்படுத்தினாலே ஜனநாயக அமைப்புக்கள் செயற்பட முடியும் என்ற நம்பிக்கையில் 1996 இல் சிறீலங்கா இராணுவத்தில் இணைந்து அவர் இறக்கும் வரை அதிலிருந்தே செயற்பட்டு வந்தார்.

மக்களின் விடுதலையும் அவர்களின் நல்வாழ்வையும் இலட்சியமாகக் கொண்ட ஒருவரை புலிகளின் ஜனநாயக விரோத செயற்பாடுகளே அவர்களுக்கெதிராகத் திரும்பியது

ஒரு புறம் யுத்தத்தால் தமிழ்மக்கள் அழிந்துபோக மறுபுறம் சகோதரப் படுகொலைகளும் தமிழ்மக்களை வாட்டி வதைக்கின்றன. மொத்தத்தில் அழிந்து கொண்டிருப்பது தமிழ் இனமே என்பதை இனி யாவது புரிந்து கொள்ள வேண்டும்.

குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்ட ராஸிக்கிற்கும் அவருடன் கொல்லப்பட்ட ஏனையோரிற்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதுடன் இத் தாக்குதலில் காயமடைந்தவர்கள் விரைவில் குணம் பெற வேண்டுமெனவும் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆறுதல் கூறி நிற்கின்றது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (ஐ)

## சேவைக்கால பயிற்சி

வலி. மேற்கு, மே 31

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 10ஆம் 11ஆம் 12ஆம் திகதிகளில் திருகோணமலையில் சேவைக்காலப் பயிற்சி நெறி ஒன்று நடைபெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது

யாழ் குடாநாட்டில் சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கு இச் சேவைக்காலப் பயிற்சிநெறியில் பங்குபற்றுமாறு திணைக்களத்தினரால் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-175)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள A/40 டெவன்கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கா. தெய்வேந்திரம். கண்ணன் ஸ்ரோர்ஸ், புலவர் வீதி, நவாலி வடக்கு.

[66216]

### யாழ்ப்பாணம்

எங்களது இன்றைய வாழ்வைச் சித்திரிக்கும் 10 சிறுகதைகளும், சிறுகதை இலக்கியத்தின் சிறப்பினை விளக்கும் ஒரு கட்டுரையும் 300 நாடகங்கள் எழுதிய அராலியூர் சுந்தரம்பிள்ளை எழுதியது ரூபா 50.

[66212]

### விற்பனைக்கு உண்டு

திரு. க. ஸ்ரீ கந்தவேள் ஆசிரியர் தொகுத்த A/L நாடகமும், அரங்கியலுக்கான 250 குறு வினா விடை புத்தகம் தெஸ்பியன் கல்வி நிலையம் K. K. S. வீதி. இணுவில் என்னும் முகவரியில பெற்றுக் கொள்ளலாம்.

[66221]

### இறைச்சிக்கோழி

Broiler இறைச்சிக்கோழிகள் மலிவு விலையில் (1 Kg 120 ரூபா) வேண்டிய அளவுகளில் தினமும் சுத்தம் செய்து மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

[66225]

### தவறிவிட்டது

S: உதயகுமாரன் என்பவரின் வங்கிப் புத்தகங்களும் அத்துடன் ஒய்வூதியப் பத்திரங்கள், கடிதங்கள் அடங்கிய பொதியொன்று கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு வந்த போது தவறிவிட்டது. இப்பொதியைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். க. ஈஸ்வரநாதபிள்ளை, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

[66203]

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Olympie 20 inch தமிழ் தட்டெழுத்து இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R. மருதலிங்கம், 8/1, அம்மன் வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

[66189]

### நெற்காணி விற்பனைக்கு

அராலி மத்தி சிவன் கோயிலிருந்து, 100 யார் தூரத்தில் கிணற்றுடன் சேர்ந்த 15 பரப்பு நெற்காணி விற்பனைக்கு உண்டு. தோட்டம் செய்யவும் உகந்தது தொடர்பு: க பூலோகரட்ணம், 22[58], இராமநாதன் வீதி, (நாச்சிமார் கோயிலடி) கலட்டி, யாழ்ப்பாணம்.

(66188)

### திருத்துதல்

சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ் மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணைச் சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி, இல. 301, கஸ்தூரியார் வீதி மேல்மாடி. (கன்னாதிட்டி, சந்தி அருகில்) யாழ்ப்பாணம்.

[66036]

## ஒன்றுகூடல்

தென்மராட்சி, மே 31

பளை மத்தியகல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடல் எதிர் வரும் மூன்றாம் திகதி வியாழக்கிழமை பி. ப 3 00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் க. குணபால சிங்கம் தலைமையில் நடைபெறும்.

(ஐ 117)

# பட்டதாரிகளின் திறன் விருத்திக்கு பயிற்சி திட்டம்

மூளாய், மே 31

தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகளின் திறன் விருத்தியை அதிகரிக்கும் வகையிலான பயிற்சித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு யாழ். பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற பின்னரும் தொழில் வாய்ப்புக் கிடைக்காமல் உள்ளவர்களுக்கும், பட்டப் படிப்பைத் தொடர்பவர்களுக்கும் மேற்படி பயிற்சித் திட்டம் பயனுள்ளதாக அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது

மேற்படிப் பயிற்சித் திட்டத்தினூடாகத் துறைசார் தகமைகளை மேலும் அதிகரித்துக்கொள்ள முடியும் என்றும்—

இதன் மூலம் அரச மற்றும் தனியார்துறைகளில் தொழில் வாய்ப்பைஇலகுவாகபெற்றுக் கொள்ள முடியும் என்றும்—

தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பயிற்சி வழங்குவதற்கான ஆரம்ப முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றது. விரைவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ 99)

## புதிதாக கடைகள் அமைப்பு

சண்டிலிப்பாய், மே 31

பண்டத்தரிப்பு பஜார்பகுதியில் புதிதாக பல கடைகளும், வியாபார நிலையங்களும் திறக்கப்பட்டு வருகின்றன.

பண்டத்தரிப்பு மத்திய சந்தைக்கட்டடம் புனரமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டதை அடுத்து பிரதான வீதியில் புதிதாக கடைகள் பல ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இதனால் மக்கள் நடமாட்டம் இப்பகுதியில் அதிகரித்து வருகின்றது.

[ஐ-135]

## குளவிகள் கொட்டியதில் காயம்

கொடிகாமம் மந்துவில் பகுதியில வெவ்வேறு இடங்களில் குளவிகளால் கடியுண்ட இருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேங்காய் பிடுங்குவதற்காக மரத்தில் ஏறிய பொன்னையா இராசேந்திரம் [வயது 35] என்பவர் மரத்தில் வட்டுக்குள் சென்ற போது குளவிகளால் கடியுண்டார்.

வீதியில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக காணப்பட்ட பனை ஓலையை எடுத்து வீச முற்பட்டசின்னப் பொடியன் பொன்னன் [வயது 75] என்பவரும் குளவிகளினால் கடியுண்டார்.

இருவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

[ஐ-117-31]

## வாழ்த்துகின்றோம்

யா/கனகரத்தினம் ம. ம. வித்தியாலய முன்னாள் இசை ஆசிரியர்

**திரு. அ. சோமசுந்தரம் அவர்கள்**

**கலா பூஷணம்**

விருது பெற்றமையை மனமாரப்பாராட்டுவதுடன் நீண்ட ஆயுளுடன் நலமாக வாழ இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

இசை ஆசிரியர்கள்
யா/கனகரத்தினம் ம.ம.வி.
யாழ்ப்பாணம்.

[66220]

உ

அளவெட்டி

## கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்

உபயகாரர்களின்

## பொதுக் கூட்டம்

இடம்: ஆலய மண்டபம்
காலம்: 05-06-99 சனிக்கிழமை
மு ப. 10.00 மணியளவில்

நிகழ்ச்சிகள்

- ஓ தேவாரம்
- ஓ தலைவர் முன்னுரை
- ஓ சென்ற பொதுக்கூட்ட அறிக்கை
- ஓ சென்ற 5 வருட வேலை அறிக்கை
- ஓ சென்ற 5 வருட வரவு செலவு
- ஓ பிரேரணைகள்
- ஓ பிற
- ஓ புதிய தர்மகர்த்தாக்கள் சபை தெரிவு
- ஓ நன்றியுரை
- ஓ தேவாரம்

உபயகாரர் கூட்டத்திற்குத் தவறாது சமுகம் தருவதுடன் சந்தாப்பணத்தையும் செலுத்துமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

சா. உருத்திரபசுபதி
செயலாளர்.

[66226]

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில்
04 - 08 - 1943



விண்ணில்
18 - 04 - 1999

அமரர்

## ஐயம்பிள்ளை செல்வநாதன்

(செந்தில்)

[நீர்வேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க கணக்காளர்]

மரணம் வாழ்வின் முடிவல்ல
நித்திய வாழ்வின் ஆரம்பம்

இன்று 31 - 05 - 1999 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
சகோதரர்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

'கட்டுப்பலானை',
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(சி/7736)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலாம்பிகை இரகுநாதையர்

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை அம்மா இரகுநாதையர் 30 - 05 - 1999 அதிகாலை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இ. சி. இரகுநாதையர் (வாக்கிய பஞ்சாங்கக்கணிதர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தையல் நாயகி அம்மா, இரத்தினசபாபதிஐயர் (திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி ந. விஜயாம்பாளின் வளர்ப்புத்தாயாரும், யோ. லலிதாம்பாள், இ. வெங்கடேசஐயர் (வாக்கிய பஞ்சாங்கக் கணிதர், கொக்குவில்.) சோ. சிவகடாட்சசர்மா, (ஸ்ரீலங்கா ரெலிகொம், யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற கி. இலங்கேஸ்வரி அம்மா, சி. சௌந்தரேஸ்வரி, சோ. ஜெகதாம்பாள், சி. அமுதாம்பாள், சோ. சிவானந்தசர்மா (ஸ்ரீலங்கா ரெலிகொம் திருகோணமலை) சோ. சிவராமலிங்கசர்மா (மலேசியா), ஆகியோரின் பெரியதாயாரும், இ. நடராஜக்குருக்கள் த. யோகேஸ்வரசர்மா, வெ. இராஜராஜேஸ்வரி, சி. சர்வேஸ்வரி, ந. கிருஷ்ணசாமி ஐயர், க. சிவசுப்பிரமணியக் குருக்கள், சி. சிவகணேசக் குருக்கள், சி. ரமா, த. விஸ்வநாதசர்மா, காலஞ்சென்ற த. தியாகராஜசர்மா, திருமதி நா. கனகாம்பிகை அம்மா, திருமதி கு. சரஸ்வதி அம்மா ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான சி. இரத்தின சபாபதி ஐயர், சி. கெங்காதரக்குருக்கள், சி. சோமசுந்தர ஐயர். திருமதி த. பர்வதவர்த்தனி அம்மா, திருமதி மு. யோகாம்பிகை அம்மா ஆகியோரின் மைத்துனியும், இரகுநாதையர், ஜெனனி (கொழும்பு), வதனி, ரமேஸ், பிரபா, நிமல், வித்யா, சுதன் ஆகியோரின் பாட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30 - 05 - 99 ஞாயிற்றுக்கிழமை கொக்குவிலில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
இ வெங்கடேசஐயர்.

சோதிடபரிபாலனமடம்,
கொக்குவில்.
T. p NO 070-212212.

(66227)

### மரியாம்பிள்ளை பிரான்சீஸ் அல்வீனஸ்

(ஓய்வு பெற்ற நீர்ப்பாசனத்திணைக்கள அலுவலர்)

யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும் வன்னியை வதிவிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை பிரான்சீஸ் அல்வீனஸ் 27 - 05 - 99 மன்னாரில் காலமானார்.

அன்னார் யூலியானா அல்வீனஸின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், கோபிபூடித். யூட் அமர்நாத் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29 - 05 - 99 சனிக்கிழமை மாலை மன்னாரில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

அன்னாரின் ஆன்மசாந்திக்காக 01 - 06 - 99 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். சகலரும் இவ்விரங்கற் திருப்பலியில் கலந்து அவருடைய ஆன்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

தகவல்
திரு. சி. தார்சீசியஸ்,
அதிபர் யா / புனித மரியாள்
வித்தியாலயம், (O. L. R.) யாழ்ப்பாணம்

49, பாலஉடையார் வீதி,
குருநகர். யாழ்ப்பாணம்.

(66229)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழைபுற்றுநோய் ஆஸ்பத்திரி: மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 31

தெல்லிப்பழையில் இருக்கும் புற்றுநோய் சிகிச்சைக்கான ஆஸ்பத்திரியை மீண்டும் திறந்து இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

வடபகுதியில் இருக்கும் ஒரே ஒரு புற்றுநோய் ஆஸ்பத்திரியான இந்த ஆஸ்பத்திரி இயங்க ஆரம்பித்த ஒரு சில வருடங்களில் இராணுவ நடவடிக்கைகளினால் மூடப்பட்டது தெரிந்ததே.

கட்டடங்கள், சிகிச்சைக்கான இயந்திர சாதனங்கள் சேதமடைந்து சுமார் 15 வருடங்களாக இயங்காத நிலையில் இது இருந்து வருகிறது.

முதற்கட்டமாக வைத்தியசாலைக் கட்டடத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

அமைச்சின் இந்த வேண்டுகோளுக்கிணங்க யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி ந. கனகரத்தினம், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவு பல் வைத்திய நிபுணர் டாக்டர் செல்வி உமா சிவபாதம், கட்டடத்திணைக்கள யாழ். பிரிவின் பொறியியலாளர் என். தேவராசன், தொழில் நுட்ப உதவியாளர் கே. சிவகுருநாதன், வடமாகாண மீள் குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு யாழ் மாவட்ட இணைப்பாளர் சி. குகராசன் ஆகியோரைக் கொண்ட குழுவொன்று, தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையின் கட்டட நிலைவரத்தைப் பார்த்து, வர நாளை செவ்வாய்க்கிழமை விஜயம் செய்யவுள்ளது. [இ-15]

## வீடுகளில் குடும்ப புகைப்படம்

# படையினரின் உத்தரவுக்கு புளொட் ஆட்சேபம்

கொழும்பு, மே, 31

குடாநாட்டில் குடும்ப அங்கத்தவர்கள் அடங்கிய குடும்பப் புகைப்படம் ஒன்றை வீடுகளில் தொங்கவிட வேண்டும் என்று படையினர் அறிவித்திருப்பது யாழ் மக்களின் சுய கௌரவத்தை களங்கப்படுத்தும் செயலாகும்.

புளொட் அமைப்பின் உபதலைவர் என். மாணிக்கதாசன் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று யாழ். குடாநாட்டு மக்கள் ஒரு திறந்த சிறைச்சாலையிலேயே வாழ்ந்து வருகின்றார்கள். அங்கு வாழும் 10 வயதிற்கு மேற்பட்ட அனைவருமே தங்கள் அரசால் வழங்கப்பட்டு வரும் தேசிய அடையாள அட்டையும் இராணுவ விசேட அடையான அட்டையும் வைத்துள்ளனர்,

கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள் இவற்றுக்கு மேலதிகமாக தாம் மீன்பிடிக்கும் போது வைத்திருக்கவென தொழில் அடையாள அட்டை ஒன்றும் வழங்கப்படுகின்றது.

இவ்வாறு மக்கள் பல அடையாள அட்டைகளை வைத்திருக்கும் நிலையில் படையினர் குடாநாட்டு மக்கள் அனைவரும் தத்தமது குடும்பப் படங்களை வீட்டுக் கதவுகளில் தொங்கவிட வேண்டும் என்றும் அறிவித்திருப்பது அந்த மக்களின் சுய கௌரவத்தை களங்கப்படுத்தும் செயலாகும்.

எனவே இந்த விடயத்தை பரிசீலிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)


## YARL HALL கல்வி நிலையம்

௨ O/L 1999 DAY CLASS

2 ஆம் பிரிவு ஆரம்பம்

௨ O/L துரித மீட்டல் வினா விடைவகுப்பு

விஞ்ஞானம்: இரா. செல்வவடிவேல் (புதன், வியாழன் காலை 6 15மணி)

கணிதம்: B. இரவீந்திரன் (திங்கள், செவ்வாய் காலை 6 15 மணி)

ஆரம்பம்: 01–06–99 செவ்வாய்

[66207]


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 24 – 04 – 1973 | 31 – 05 – 1996 |

செல்வன்

### (சாமியார்) நவரட்ணம் லெபோன்ஸ்

பன்னிரு திங்கள் மூன்று கரைந்ததப்பா
பரிதவிக்கவிட்டு இப்பாரினிலே
பிரிவு என்பது உலகறிந்த உண்மையப்பா
பிரிந்த வழிதான் தெரியவில்லை.

உம் பிரிவால் துயருறும்
ஐயா, அக்கா, தங்கை, தம்பிமார்,
அத்தான், பிள்ளைகள்.

நிரந்தர விலாசம்
காங்கேசன்துறை வீதி, பலாலி.
தற்போதைய முகவரி
D. R. O. லேன், சுன்னாகம். (66075)

## மீண்டும் இயங்குகிறது

வடமராட்சி, மே 31

புலோலி சிங்கைநகர் பனை வெல்லத் தொழிற்சாலை நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது.

இத்தொழிற்சாலையை இலங்கை பனை அபிவிருத்திச் சபையும், பருத்தித்துறை புலோலி உற்பத்தி ஏற்றுமதிக் கிராமமும் இணைந்து இயக்கி வருகின்றன. [க-173]

## வெங்காயம் கொள்வனவு

சண்டிலிப்பாய், மே 31

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் சங்க உறுப்பினர்களான விவசாயிகளிடமிருந்து வெங்காயத்தைக் கொள்வனவு செய்து வருகின்றது.

அண்மையில் இச் சங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ஏழாயிரம் கிலோ நிறையுள்ள வெங்காயம் யாழ் மாவட்ட நுகர்ச்சி விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தின் ஊடாக கொழும்புக்கு சந்தைப்படுத்துவதற்காக கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## மருத்துவ சிகிச்சை முகாம்

தென்மராட்சி, மே 31

பளை லயன்ஸ் கழகத்தினர் வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களுக்கான இலவச மருத்துவ சிகிச்சை முகாமினை எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தாளையடி றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நடத்தவுள்ளனர்.

சிகிச்சை முகாமில் கண், சலரோகம் இரத்த அழுத்தம் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளன. யாழ். பிராந்திய லயன்ஸ் கழகங்களைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகளும், யாழ். லாவண்யா கண் சிகிச்சை நிறுவன பிரதிநிதிகளும் கலந்து கொண்டு பரிசோதனைகளை நடத்துவர்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக லயன்ஸ் கழக பிராந்தியத் தலைவர் லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் கலந்து கொள்வார். (ஐ-117)

## வீதி சேதம்

அச்சுவேலி, மே 31

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு செல்லும் பிரதானவீதி திருத்தி அமைக்கப்படாமல் இருப்பதால் ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

வல்வை நெசவு நிலைய நாற்சந்தியில் இருந்து செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு செல்லும் பிரதான வீதியில் இடை நடுவில் ஒரு பகுதி [illegible] இருந்து வருகின்றது. (ஐ-11)

# செய்திக் கொத்து

## சிந்துநடைக் கூத்துமுதலிடம்

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணக் கல்விவலயப் பாடசாலைகளிடையே அண்மையில் நடைபெற்ற தமிழ்மொழித் தினப்போட்டியில் நாட்டிய நாடகம், நாட்டுக்கூத்து ஆகியவற்றில் ஊரெழு கணேசவித்தியாசாலையினால் மேடையேற்றப்பட்ட 'காத்தவராயன்' சிந்துநடைக் கூத்து முதலாமிடத்தைப் பெற்றுள்ளது.

மேற்படி வித்தியாலய ஆசிரியர் செ. சிவகுமார் மேற்படி சிந்து நடைக் கூத்தை நெறிப்படுத்தினார். (ஐ-7)

## நூலகர் நியமனம்

நெடுந்தீவு, மே 31

பன்னிரண்டு பட்டதாரிகளுக்கு தீவுப்பகுதியில் நூலகப் பதவிகளுக்கான நியமனம் கிடைத்துள்ளது.

தீவகப் பாடசாலைகளில் இவர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளது. நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நூலகராக நெடுந்தீவைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தீவக கல்வி வலயப் பணிமனையில் தமக்குரிய நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-111)

## இலவச கல்விப் போதனை

நெடுந்தீவு, மே 31

நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் மாணவர்களுக்கு இலவசமாக சங்கீத பாடத்தை கற்பித்து வருகின்றது.

ஏற்கனவே ஆங்கிலம், கணிதம், விஞ்ஞான பாடங்களை ஒன்றியம் இலவசமாகக் கற்பித்து வருவது குறிப்பிடத்தக்கது. (க-111)

## மரக்கறி விதை விநியோகம்

சண்டிலிப்பாய், மே 31

உலக உணவு நிறுவனம் விவசாயிகளுக்கு இலவச மரக்கறி விதைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் தொல்புரம், கீரிமலை, உடுவில் ஆகிய மூன்று கமநல கேந்திர நிலைய பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு உடுவில் கமநல கேந்திர நிலையத்தில் வைத்து மரக்கறி விதைப் பக்கெற்றுகளை வழங்கியுள்ளது.

இப் பிரிவுகளிலுள்ள விவசாய சம்மேளனங்களினால் சிபார்சு செய்யப்பட்ட — அண்மையில் மீளக்குடியமர்ந்த — விவசாயிகளுக்கு உலக உணவு நிறுவனத்தின் யாழ் மாவட்ட திட்ட முகாமையாளரினால் இந்த மரக்கறி விதைகள் வழங்கப்பட்டன. (ஐ-135)

## புனரமைப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 31

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்துள்ள சுன்னாகம் மரக்கறிச்சந்தை, மீன் சந்தை, தண்ணீர்த்தாங்கி மற்றும் கடைகள் என்பன வற்றை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 3 ஆம்திகதி முதல் இப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. [ஐ-15]

## நல்லின ஆடுகள் வாங்க கடன் உதவி

தென்மராட்சி மே 31

பச்சிலைப்பள்ளி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினர் பிரதேசத்தில் நல்லின ஆடுகளை விருத்தி செய்யும் பொருட்டு நல்லின ஆடுகள் கொள்வனவு செய்வதற்காக 35 பயனாளிகளுக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் கடன் வழங்கியுள்ளதாக சங்கச் செயலாளர் ச. முரளிதரன் தெரிவித்தார். (ஐ-117)

## பாடசாலைக்கு மல சல கூடம்

சண்டிலிப்பாய், மே 31

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் கீழ் மூன்று மலசல கூடங்கள் விரைவில் அமைக்கப்படவுள்ளன. [ஐ-135]

## வீதி நிலை மோசம்

உரும்பிராய், மே 31

உரும்பிராய்ப் பகுதியில் உள்ள பல குறுக்கு வீதிகள் மக்கள் பயன்படுத்த முடியாது குண்டும் குழியுமாக காணப்படுகின்றது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்த வீதிகள் புனரமைக்கப்படாமையே இதற்குக் காரணம் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-154)

## நியமனம்

வலிகாமம் தெற்கு, மே 31

கந்தரோடை உபதபால் நிலையத் தபாலதிபராகத் தம்பிஜயா பரமேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கந்தரோடை உபதபால் நிலையத்தில் 38 ஆண்டுகளாகக் கடமையாற்றிய ஆ. சி. கணேசவேல் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து இவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (க-152)

## ஆலயம் அமைப்பு

கொழும்புத்துறை, மே 31

பனிப்புலம் காலையடி அருள்மிகு ஸ்ரீஞானவேலாயுத முருகன் தேவஸ்தானத்தின் அருகில் அமைக்கப்பட்டு வரும் கௌரி அம்பிகா சமேத கேதீஸ்வரநாதர் புதிய ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஜூன் மாதம் பிற்பகுதியில் இடம் பெறவுள்ளது. (ஐ 30)

## காலாண்டு சஞ்சிகை

கொழும்புத்துறை, மே 31

தொல்புரம் விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் 'சமூகச்சுடர்' காலாண்டு சஞ்சிகையை அண்மையில் வெளியிட்டது. [க-30]

## வைத்திய அதிகாரி நியமனம்

தென்மராட்சி, மே 31

பளை அரச வைத்தியசாலைக்கு பத்து வருட இடைவெளிக்குப் பின்னர் வைத்திய அதிகாரியொருவர் சுகாதார திணைக்களத்தினால் ஜூன் முதலாம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு நியமனம் பெற்று வந்த 17 வைத்திய அதிகாரிகளுள் ஒருவரே பளை வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவில்
மகளிர் கல்லூரி
(FURTHER EDUCATION)

A/L

LOGIC

மாலை நேர வகுப்புகள்!

- 1999 இற்கான துரிதமீட்டல் வகுப்புகள் [பகுதி II இலிருந்து ஆரம்பிக்கப்படும்]
- 2000, 2001 ஆண்டுகளுக்கான புதிய பிரிவுகள்
- இரு பாலாரும் அனுமதி பெறலாம்.
- வகுப்புகள் ஆரம்பம்: 1- 6- 99 மாலை 3 மணி
- அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

(சி/7675) — நிர்வாகி


# காரைநகர் மாணவருக்கு உபகரணங்கள்

நெடுந்தீவு, மே 31

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மாணவர்களுக்கு அவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு தீவுப் பகுதி லயன்ஸ் கழகம் கொப்பிகள் மற்றும் பாடசாலைக்கான உபகரணங்களை இலவசமாக வழங்கவுள்ளது.

நாளை முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை தீவக லயன்ஸ் கழகத் தலைவர் சோ. விக்னேஸ்வரன் மேற்படி பாடசாலையில் வைத்து அவற்றை மாணவர்களுக்குக் கையளிப்பார்.

பாடசாலைமாணவர்களுக்கு வேண்டிய உபகரணங்களை வழங்கும் திட்டம் காரைநகரில் உள்ள ஏனைய பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படடவுள்ளது. இந்நிகழ்ச்சியில் தீவகத்தைச் சேர்ந்த லயன்ஸ் கழக உறுப்பினர்களும் கலந்து கொள்ளுவார்கள்.

தீவக லயன்ஸ் கழகம், ஏற்கனவே எழுவைதீவு, புங்குடுதீவு, சரவணை, நயினதீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சில பாடசாலை மாணவர்களுக்கு கொப்பிகள் மற்றும் உபகரணங்களை வழங்கியுள்ளது. (ஐ-111)

# கருத்தரங்கு

நெடுந்தீவு, மே 31

நெடுந்தீவு மேற்கில் சுய தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களை ஒய்வூதியத் திட்டத்தில் இணைத்துக் கொள்வது குறித்த விளக்கக் கருத்தரங்கு எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை பி. ப. 4 மணிக்கு மேற்கு ஐக்கிய தீப சனசமூக நிலையத்தில் நடைபெறும்.

நிலையத் தலைவி செல்வி ந. கருணகலாதேவி தலைமையில் நடைபெறும் மேற்படி கருத்தரங்கில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன், கிராம அலுவலர் கே. சண்முகலிங்கம், வீ. ரமணன், கோ. பத்மநாதன் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

[ஐ-111]

# சம்பந்தர் குருபூசை

கொழும்புத்துறை மே 31

நாளை செவ்வாய்க்கிழமை திருஞான சம்பந்தர் குருபூசை தினமாகும் இத்தினத்தை முன்னிட்டு குடாநாட்டில் உள்ள பெரும்பாலான ஆலயங்களில் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம் பெறவுள்ளன.

[ஐ-30]

# விவசாயிகளுக்கு விதை நெல்

சண்டிலிப்பாய், மே 31

பண்டத்தரிப்பு விவசாய சம்மேளனம் தனது பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு எதிர்வரும் காலபோக நெற்செய்கைக்கான விதை நெல்லைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. தேவைப்படும் விதை நெல் பற்றிய விவரத்தை தொல்புரம் கமநல கேந்திர நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தரிடம் சம்மேளனம் சமர்ப்பித்துள்ளதாக சம்மேளனத்தின் தலைவர் ச. செல்வரத்தினம் தெரிவித்தார்.

கடந்த வருடத்தின் இறுதியில் பெய்த கடும் மழையினாலும், வெள்ளத்தினாலும் இப்பகுதியில் பல நெல் வயல்களில் முற்றிய நிலையில் இருந்த நெற்கதிர்கள் அழிந்து போனது குறிப்பிடத்தக்கது.

[ஐ-135]


# தேவை

வெகு விரைவில் ஆரம்பமாகவிருக்கும் தொழில் நுட்ப நிறுவனத்திற்கு

(1) குளிரூட்டல் துறை தொழில்நுட்ப வல்லுநர்கள் [5 வருட அனுபவம்]
(2) மின்னியலாளர் (5 வருட அனுபவம்) (வீடு, தொழிற்சாலை வயரிங் அனுபவம் உட்பட)
(3) வர்ணம் தீட்டுபவர் (5 வருட அனுபவம்) (கார், குளிர்சாதனப் பெட்டி உட்பட)

(மேற்கூறிய வேலையாள்கள் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்ய வேண்டும்)

விண்ணப்பங்களை ஜுன் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும்.

விளம்பரதாரர் இல. 886
மே/பா. உதயன்
361, கஸ்தூரியார் விதி, யாழ்ப்பாணம்.
(66185)


# 10 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 28 — 12 — 1928
உதிர்வு 21 — 05 — 1999

திருமதி
## தியாகராசக்குருக்கள் ஞானகமலாம்பிகை


கரம்பைக்குறிச்சி வரணியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் புவனேஸ்வரியம்மா தம்பதியினரின் ஏக புத்திரி தியாகராசகுருக்கள் ஞானகமலாம்பிகை அவர்களின் பாஷாண கிரியைகள் இன்று (31- 05- 99) திங்கட்கிழமையும் நாளை (1-6-99) செவ்வாய்க்கிழமை நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் கலந்து சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னார் சுகவீனம் உற்றவேளை இறுதி நேரத்தில் அவரின் உயிருக்காகப் போராடிய மருத்துவர்கள், தாதியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

– குடும்பத்தினர்

கரணவாய் தெற்கு. (66194)

# 8 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 19 — 03 — 1932
மறைவு 31 — 05 — 1991

அமரர்
## டாக்டர் J. P. C. பிலிப்ஸ்

[J P. ALL CEYLON] [M.B B.S Cey.]

அன்புக்கு உறைவிடமாய்த் திகழ்ந்து
சேவையைக் குறிக்கோளாகக் கொண்டு
நீங்கள் செய்த பணியை எட்டு ஆண்டுகள் என்ன
எத்தனை ஆண்டுகளாயினும் நாம் மறவோம்.

மனைவி, பிள்ளைகள்,
டாக்டர், ஊழியர்கள்,
பிலிப்ஸ் நர்சிங் ஹோம்.

28, கதிற்ரல் வீதி,
யாழ்ப்பாணம்.
[66224]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 06 — 11 — 1927
மறைவு 01 — 05 — 1999

அமரர்
## இளையவி சின்னத்துரை

அன்பு காட்டி — எம்மை
ஆளாக்கி வைத்தவரே!
இவ்வுலகில் நாமுயர — ஏணியாக நின்றவரே!
எம் குடும்ப குல விளக்கே!
எமை விட்டு ஏன் ஐயா சென்றீர்?
உம் நினைவு எம்மை விட்டுப் பிரியுமா?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சேத்துப்பிடிச்சி வீதி,
சங்கானை.
(66219)

# இரண்டாம் ஆண்டு நினைவு



அமரர்
## கனக. சத்தியநேசன்

(வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலை)

மண்ணில் 1970 04–15
விண்ணில் 1997–05–23

திதி: அபரபக்க பிரதமை

ஆண்டு இரண்டு புரண்டு ஓடினும்
பூண்ட உன்பக்தி நெஞ்சை அறுக்குதே!
மாண்புடன் நீவாழ்ந்த வாழ்வுதான் என்னே!
காண்பதினி எப்போ உன்நிழலைச் சத்தியனே!
ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்

மனைவி,
மகள் விதுர்ஷா,
குடும்பத்தினர்.

சோதிடர்-ம. சிவகுருநாதன்,
'கலாஞ்சலி'
அல்வாய்.
(66187)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நம்பிக்கை போயிற்றா?

யாழ். குடாநாட்டில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் புனர்வாழ்வு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகள் (E. U. M. S.) பெரும் அதிருப்தி தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் புனர்வாழ்வு நிவாரண நடவடிக்கைகளில் தலைமை (முன்னணி) வகிக்க வேண்டியபொறுப்பு அரசாங்கத்தினுடையதே. ஆனால் அரசு அவ்வாறு செய்யாமல். சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்களின் செயற்பாடுகளைக் குறை நிரப்பும் (Supplementing) வேலையையே செய்து வருகிறது என்று ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் குற்றம் சுமத்தி உள்ளன.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் சார்பில் அதன் தலைமைப் பதவியை இப்போது வகிக்கும் ஜேர்மனி, வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பிய குறிப்பு ஒன்றின் மூலம் இலங்கை அரசின் மீது அதிருப்தியும் குற்றச்சாட்டும் தெரிவித்துள்ளது.

குடாநாட்டின் புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளில் வெளிநாட்டு (தொண்டர்) நிறுவனங்களை — வெளிநாடுகளை முன்னுக்கு போகவிட்டு, இந்நாட்டு அரசாங்கம் பின்னுக்கு நிற்கிறது என்பது இங்கு வாழும் மக்களுக்கு இன்றும் புதியது அல்ல. வெளியிடங்களில் இருந்து இங்கு வந்தவர்கள் கூட புனரமைப்பு, புனர்வாழ்வுத் துறைகளில் வெளிநாட்டு நிறுவனங்கள் விரைந்து ஓடுவதனையும், அரசாங்கம் ஆமை வேகத்தில் நகர்வதனையும் அவதானித்துச் சென்றுள்ளனர்.

அரசாங்கத்தின் புனர்வாழ்வு, மீள்குடியமர்வுப் பணிகள் வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை மூலமே செய்யப்படுகின்றன. அதிகாரசபைக்கென்றே அரசாங்கம் நிதி ஒதுக்குகிறது. எனினும் அதன் செயலாற்றல் மக்கள் எதிர்பார்க்கும் அளவுக்குப் பயன் தருவதாகத் தெரியவில்லை.

இலங்கைக்கு சமாதானம் திரும்பும் என்ற நம்பிக்கையிலேயே, அமைதிக்கான பொருளாதார, சமூக அத்திவாரத்தை வலுப்படுத்துவதன் ஊடாக நிரந்தர சமாதானத்தை உருவாக்க முடியும் என்ற எதிர்பார்ப்புடனேயே ஐரோப்பிய ஒன்றியம் உதவ முன்வந்ததாகவும் வெளிவிவகார அமைச்சுக்குக் கையளிக்கப்பட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பது ஆழமாக நோக்கப்பட வேண்டியதாகும்.

புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளில் அரசுபின் தங்கி நிற்பது குறித்து அதிருப்தி அடைந்துள்ளது போலவே, சமாதானம் நிலைநாட்டப்படும் என்பதிலும் ஐரோப்பிய நாடுகள் நம்பிக்கை இழந்துவிட்டன என்பதையே இந்தக் குறிப்புக் கோடிட்டுக் காட்டுவதாகக் கருத இடமுண்டு.

அதுவே சரியானால், உண்மையானால் சமாதானமும் அமைதியும் பிறப்பதற்கு இந்த அரசாங்கம் உழைக்கும் என்ற நம்பிக்கையை, தமிழ் மக்களைப் போலவே மேலைநாடுகளும் இழந்துவிட்டன என்பதேயாகும்.

# தனக்குமட்டுமன்றி அடுத்தவருக்கும் தீங்கு செய்யும் புகைக்கும் பழக்கம்

''தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப் படும்'' என்பது தமிழ்மறை. இன்றைய சூழ்நிலையில் பல தீய செயற்பாடுகள் என்றுமில்லாத வகையில் அதிகரித்து வருவது அனைவரையும் கவலை கொள்ள வைக்கும் அளவுக்கு உருப்பெற்றுள்ளது. இதில் ஒன்றுதான் எமது இளம் சந்ததியினரையும் ஏனையோரையும் நோயாளிகளாக்கி வரும் புகைத்தல் பழக்கமாகும். இதுபற்றி இன்றைய தினம் ஆராய்வது பொருத்தமானதாக இருக்கும்.

இன்றைய நவீன உலகில் புதிய நோய்களில் பலவும் பரவி வருவதற்குமூலவேராக இருப்பது புகைத்தலாகும். இதற்கு அடிமையாகிவிட்ட ஒருவர், நோயாளியாகத் தாமும் மாறுவதுடன் அருகில் உள்ளவர்களுக்கும் நோயை வலிந்து கொடுத்து விடுகின்றார் ஒருவர் ஆரோக்கியமாக இருப்பதற்கு எவ்வளவு அக்கறையோடு சுகாதாரத்தைப் பேணினாலும் இயலாமல் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணியாக அமைந்து விடுகின்றது. உதாரணமாக ஒரு கர்ப்பிணிப் பெண் நிற்கும் இடத்தில் ஒருவர் புகைப்பிடிக்கும்போது ஏதுமறியாத இளம் பிஞ்சின் ஆரோக்கியத்திற்கு எதிரானவராக மாறிவிடுகின்றார்.

ஒருவர் புகைபிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகிவிடுவதனால் அதுவே பின்பு வழக்கமாக மாறிவிடுகிறது இது ஓர் ஆழ்மனப் பதிவாகி விடுவதனால் இலகுவில் இதிலிருந்து விடுபட முடியாத நிலை ஏற்பட்டு விடுவது இயல்பே புகைத்தலே இல்லாமல் இருக்கவே முடியாதென்ற ஒரு தவறான எண்ணத்தினைத் தன் உள்ளத்திற்குள் தானே ஏற்படுத்தி விடுகின்றார். ஒரு தந்தை ''பீடி'' பிடிக்கும் பழக்கமுடையவராக இருந்தால், அவரது பிள்ளை பீடியைக் களவாக எடுத்துச் சென்று மறைவிடத்திலிருந்து ஒரு தரம் சுவைத்துப் பார்த்துப பின் சிறிது காலஞ் சென்றதும் பீடியைவிட விலையுயர்ந்த புகைப் பொருட்களைச் சுவைத்துப் பழகிப் பின்பு அதனையே அவர்கள் தமது வழக்கமாக்கி விடுகின்றனர்.

### புகைத்தலின் விளைவுகள்

புகைக்கும்போது உள்ளிழுக்கும் புகைக் கலவையில் உடல் நலத்துக்கு தீமை பயக்கும் பல வகை மூலங்களும் உள்ளிழுக்கப்படுகின்றன, அவற்றுள் 18 வகையான மூலகங்கள் கொடிய நச்சுத்தன்மை உடையவை. அவற்றுள் குறிப்பானவை வருமாறு குருதியின் ஒட்சிசன் அளவைக் குறைக்கும் காபன் ஓர் ஒட்சைட் புகைக்கும்போது இரத்தத்திலுள்ள காபனோர் ஒட்சைட் 4 முதல் 5 சதவீதத்தால் உயர்கின்றது. இரத்தத்தில் காபனோர் ஒட்சைட்டின் அளவு 0.4% இருந்தாலே ஒட்சிசன் பற்றாக்குறை நோய் [கைப்பொக்சியா] உண்டாகும். ஒட்சிசனைவிட காபனோர் ஒட்சைட் இரத்தத்தில் உள்ள கீமோகுளோபினுடன் மிகவிரைவில் சேர்கிறது.

மேலும் உடல் புற்றுநோய் திசுக்களை யுருவாக்கும் 'ரார்' என்பது ஐதரசன் சையனைட் ஆகும் இது ஒரு சிகரட்டில் 160 முதல் 400 மைக்கிறோ கிராம் உள்ளது. இந்த நஞ்சுடன் நாம் உண்ணும் உணவில் இருக்கக்கூடியபொட்டாசியம் மிகின் சேர்ந்தால் மரணத்தை உடன் உண்டாக்கும் பொட்டாசியம் சையனைட் நஞ்சாகின்றது.

> சர்வதேசப் புகைப் பொருள் மறுப்புத் தினம் இன்று — மே 31 ஆம் திகதியாகும். வட பிரதேச நல்லெ முக்க சம்மேளனமும் போரூட் நிறுவனமும் இணைந்து குடாநாட்டில் மறுப்புத் தின நிகழ்வுகளையும் கொடி தினத்தினையும் நடத்துகின்றன. வ பி. ந சம்மேளனம் அதனையொட்டிவெளியிட்ட அறிவுறுத்தல் குறிப்புகள் இங்கே கட்டுரை வடிவில் பிரசுரிக்கப்படுகின்றன.

உடலுக்கு உற்சாகமூட்டி கழுத்து அறுக்கும் நஞ்சான நிகொற்றின் (NICOTINE) ஆகும் இந்த நஞ்சு இதயத்தின் தசைகளில் ஒழுங்கீனமான தூண்டல்களை ஏற்படுத்துகின்றது. இதனால நாடித் துடிப்பு அதிகரித்தல், இரத்த அழுத்தம் தற்காலிகமாக அதிகரித்தல், குருதிச்சிறு தட்டுகளில் ஒட்டும் தன்மை அதிகரித்தல் உடலின் வெப்பத்தைக்குறைத்தல் போன்ற தீய விளைவுகளினை ''புகை'' உடனேயே செய்கின்றது நிக்கொற்றின் பாவிப்பாரிடையே அடிமை நிலையினை (Dependancy) உண்டாக்குவதும் குறிப்பிடத்தக்கது. மது அடிமை நிலையை விட நிக்கொற்றின் அடிமை நிலை இலகுவில்கைவிடமுடியாதது

### நோய்கள்

★ உடம்பின் சகல உறுப்புக்களையும் புகைத்தல் பாதிக்கின்றது.

★ இது புகைப்பவரது நோய் எதிர்ப்பு வலுவினை (எயிட்ஸ் கிருமி போன்று) குறைத்து விடுகின்றது.

★ குருதிக் குழாய்களின் உட்சுவர்களை பழுதடையச் செய்து கல்சியப் படிவங்களை ஏற்படுத்தி அடைப்பினை ஏற்படுத்துகின்றது. இதனால் மாரடைப்பு, பாரிசவாதம், இரத்த அழுத்தம் என்பன ஏற்படும் ஆபத்து உண்டு. புகைக்காதவரைவிட புகைப்பவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு 70 சத வீதத்தால் அதிகம்,

★ சுவாசத்தொகுதி உறுப்புக்களை பாதிப்படையச் செய்கிறது. தொடர்ச்சியான இருமல் (Smokers Cough) தொய்வு (Asthma நிலைமை நீடிப்பின் சுவாசப்பை சுருங்கி விரியும். மீள்சக்தி பாதிப்படைந்து ''எம்பசீமா'' உண்டாகிறது.

★ புகைப்பவர்களில் 90 சதவீதமானவர்கள் சுவாசப்பை புற்றினாலும் 75 சதவீதமானவர்கள் சுவாசப்பை அழற்சியினாலும் 25 சத வீதமானவர்கள் இருதய நோயினாலும் மரணம் அடைகின்றனர். புகைப்பவர்களுக்கும், புகையிலையினை வாயில் போடுபவர்களுக்கும் வாய், குரல்வளை, உணவுக்குழாய் போன்றவற்றில் புற்று ஏற்படும் வாய்ப்பு அதிகம். மேலும் சலப்பை, ஈரல், புறஸ்ரேற் போன்ற உறுப்புக்களும் பாதிப்புறும் சாத்தியம் பெரிதும் உண்டு.

★ கண்பார்வையை இழக்கச் செய்கிறது.

★ பாலியல் உணர்வை மழுங்கடிக்கின்றது.

பணம் கொடுத்து [விலைக்கு] நோய் வாங்குவது புகைத்தல். அதனை வழக்கத்தில் கொண்டு வந்தவர்களுக்கு புகைத்தலைக் கைவிட சில யோசனைகள்:

★ இனிப் புகைப்பதில்லை என உறுதியான தீர்மானத்தை எடுத்தல்.

★ புகைப்பிடிப்போர் சூழலில் இருந்து விலகி வாழ்தல்.

★ தினமும் 2 தடவைகள் சுடுதண்ணீரில் குளித்துவிட்டு குளிர்பானங்கள் அருந்துதல். திறந்த வெளியில் தினமும் உடற்பயிற்சி செய்தல்.

★ ஆழமான சுவாசப் பயிற்சி செய்தல்.

★ போசாக்கான உணவை உண்ணுதல். குறிப்பாக பழவகைகள் இலை இரத்தத்திலுள்ள புகையினால் ஏற்பட்ட நஞ்சுப்பொருள்களை அகற்றும்

★ உற்சாகம் ஊட்டும் ஏனைய போதைப்பொருள்கள் மற்றும் தேநீர், கோப்பி என்பவற்றை தவிர்த்தல்.

★ புகைப்பிடிக்கும்எண்ணம் ஏற்படும் போது வேறு செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

★ புகைப்பதனால் ஏற்படும் தீமைகள் பற்றி ஆழமாக அடிக்கடி சிந்தித்தல்

★ புகைக்க வேண்டும் என்ற அடக்க முடியாத ஆசை ஏற்படும் போது மன உறுதியினை தந்தருளும்படி இறைவனைப் பிரார்த்தனை செய்தல்.

உன் வாயில் புகைத்தல் மணம்
மற்றவர்க்கு உன்மீது வெறுப்புமனம்
விட்டு விலகுது நீ உழைத்த பணம்
கூடவே நோயையும் வாங்குது உன்மனம்
புகைத்தலை விட்டுவிட முடியும்
அதற்கு உன்னிடமே உள்ளது மனம்.

★

## நாளை

வைகாசி 18
செவ்வாய்க்கிழமை
திதி: துதியை
முற்பகல் 3.18வரை
நட்சத்திரம்: மூலம்
முன் இரவு 9.24 வரை
திருஞானசம்பந்தர் குருபூசை
சுபநேரம்: 10 22-11 52
ராகுகாலம்: 2 52 - 4.22
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயனுக்கு

உயர்ந்த விதி எது?
வாழ்க்கையில் ஒழுக்கத்தில் நேரம் தவறாமையே!
—பெஞ்சமின் பிராங்கிளின்

## வாசகர் திருமுகம்

### வீதி திருத்தப்படுமா?

எழுதுமட்டுவாழ் — நாகர்கோயில் வீதி கடந்த பல ஆண்டு காலமாகத் திருத்தப்படாது. குண்டுங் குழியுமாகக் காணப்படுகின்றது. எழுதுமட்டுவாழ் சந்தியையும் நாகர்கோவில் சந்தியையும் இணைக்கும் இவ்வீதி சுமார் மூன்றரைக் கிலோமீற்றர் நீளமானது சில ஆண்டுகளுக்கு முன் இவ் வீதி திருத்தியமைப்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டு கற்களும் பறிக்கப்பட்டன. பெருந்தெருக்கள் திணைக்களத்துக்குச் சொந்தமான இவ்வீதிக்கு ஒதுக்கப்பட்ட நிதி மீளப் பெறப்பட்டு வேறு இடத்துக்கு மாற்றப்பட்டதாக அறிகின்றோம். கட்டாயமாகத் திருத்தப்படவேண்டிய இவ்வீதிக்கான நிதி இடம்மாறியமைக்காக எழுதுமட்டுவாழ் மக்கள் சார்பாக வருத்தமடைகின்றேன். தற்போது இவ்வீதியினால் நாகர்கோயிலில் இருந்து தனியாருக்குச் சொந்தமான பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன அத்துடன் பாடசாலை மாணவர்கள், மற்றும் பொதுமக்களும் இவ்வீதியினையே நாட்டு நிலைமை காரணமாக கட்டாயமாகப் பயன்படுத்தவேண்டியதாக இருக்கின்றது குண்டுங் குழியுமாக மிகவும் பழுதடைந்த இவ் வீதியினைப் பெரும் மழைகாலத்திற்கு முன்னர் புனரமைப்புச் செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

எழுதுமட்டுவாழ் — க. காலபாபு

### எப்போது வரும்?

யாழ். மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளுக்கு 24 மணிநேர மின்சாரம் வழங்கப்பட்ட போதும் சிலபகுதிகளில் மின்சாரம் வழங்குவதற்குரிய எவ்விதமான நடவடிக்கைகளுமே மேற்கொள்ளப்படாமை நொந்து போயுள்ள உள்ளங்களுக்கு 'வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவது' போலுள்ளது.

ஏற்கனவே நாட்டுநிலைமையால் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் கைத்தொழிலாளர், கமத்தொழிலாளர் செறிந்துவாழும் நீர்வேலிப் பகுதியில் மின்சாரம் வழங்குவதற்கான எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை கைத்தொழிலை வளர்ப்பதற்கும், விவசாய நீர்ப்பாய்ச்சலிற்கும் மட்டுமல்லாது மாணவர்களின் கல்விவளர்ச்சிக்கும் மின்சாரம் எத்துணை புரிகின்றது என்பது யாவரும் அறிந்ததே. அப்படியிருந்தபோதிலும், மாணவர்கள் கைத்தொழிலாளர்கள், கமத்தொழிலாளர்கள் செறிந்து வாழும் எமது பகுதிக்கு மின்சாரம் வழங்குவதில் மின்சார சபையினர் அசிரத்தையாக இருப்பது ஏன்?

எமது பகுதியை கடந்து தூர இடங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டபோதிலும் எமக்கு எப்போது மின்சாரம் வரும் என வழிமேல் விழிவைத்து அங்கலாய்த்தவண்ணமுள்ள உள்ளங்களின் அங்கலாய்ப்பு பாராமுகம் காட்டும் இலங்கை மின்சார சபையினருக்கு சமர்ப்பணமாகட்டும்.

நீர்வேலி. — நீர்வை சுதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானத்தில் பயணம் செய்ய அனுமதி கிடைத்தோர் விவரம்

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு விமானம் மூலம் பயணம் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன.

இம் மாதம் 14 ஆம் திகதி வரை பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களில் — பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஒரு தொகுதியினரின் பெயர் விவரங்கள் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தன.

அதன் எஞ்சிய பகுதியும் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்களும் கீழே தரப்படுகின்றன:

### பருத்தித்துறை

எம். நடராஜசுந்தரன் [089765/ஏ], எல். போபிதை [098315/சி], எஸ். நடராஜா [100783/ஏ], ஏ லுவினிதாஸ் [098315/பி[, எஸ். பரமசிவம் [098181/ஏ], எஸ் சிவஞானம் [101070/ஏ], வி. ராஜேஸ்வரி [098288/ஏ], கே. சிவகுமார் [097939/ஏ], பி. செல்வரட்ணம் [097986/ஏ]. எஸ். தனராஜா [092142/டி].

ஆர். ரட்ணம் [095344/ஏ], கே. குமணன் [100886/ஏ]. எம். தேவகாந்தன் [100848/ஏ, எஸ். நிசாந்த ராஜா [092142/சு], ஏ. பூமணி [100903/ஏ], என். தங்கேஸ்வரி [100783/பி], பி. தேவராணி [095320/பி], கே. ராஜ்குமார் [100831/ஏ], பி. கிருபாதரன் [095320/சி], ரவீந்திரன் [100776/ஏ].

பி. ரசிகசிங்கம் [098174/சி], பி. தங்கரட்ணம் (098174/பி), சின்னச்சாமி சர்மா (095410/சு), ரமேஸ் [100931/பி], பி. பாலசிங்கம் (098174/ஏ), கே. சண்முகம் [100931/ஏ]. எஸ். செல்வராசா (100904/ஏ), எம். ஏகாம்பரநாதன் [100983/ஏ], எஸ். ஸ்ரீதரன் [100991/ஏ], வி. கதிர்காமு [100882/ஏ].

முரளிதரன் [095413/ஏ), வை. பூங்கனலோன் [100920/பி], பி. கமலேஸ்வரி [101051/பி], எஸ். கம்சகமலாம்பிகை [095410/எவ்], வை. உதயன் [100920/சி], ஜி. பகார் (093465/ஏ), எம். மதுவந்தி [097929/சி], ஸ்ரீஸ் கந்தராசா [098288/பி], ரி. தவமணி[101098/ஏ], பி. தியாகராஜா (080303/ஏ)

கே. ரட்ணேஸ்வரி [095300/ஏ]. எஸ். கதிர்காமத்தம்பி (100958/ஏ), வி வேலாயுதம் பிள்ளை (095383/ஏ), வை. ராசலக்ஷ்மி [100920/ஏ], எஸ். சக்திதாசன் (095410/ஏ), கே. மகாலிங்கம்[095223/ஏ], எஸ் சாந்தி [095410/பி], எஸ். பத்மநிவாஸ் [095410/சி], எஸ் ஷகிகா [095410/டி], கே. ஜி. சிவக்கொழுந்து (095377/ஏ).

எஸ் ஆனந்தன் (095376/ஏ), வை. பூரணி [100920/டி], எஸ். சாம்பசிவம்[100992/ஏ], கே. பரமேஸ்வரி [100882/பி], எம். மதனா [100809/சி], எம். பி. புஸ்பராணி [101230/ஏ], ரமீனா [100809/டி], கே. சுதாகரன் [101165/ஏ], எஸ். அனுசா [100849/பி], ஏ பரமானந்தம் (101051/ஏ).

எஸ். ரவீந்திரன் [100849/சி], எஸ். வேலும்மயிலும் [095498/சி]. பி. ஸ்ரீதரன் [098174/டி], எம். சிவகுமார் [100927/ஏ], ரி. பாமா [100907/ஏ], வி. நடராஜா [100907/பி], கே. பாக்கியநாதன் [100947/ஏ], ரி. பாலகிட்டினப்பிள்ளை [101036/பி]. வி. சிவகாமி [095498/டி], எஸ். பக்கியசங்கர் [095141[ஏ].

எஸ். சிற்றம்பலம் [100858/ஏ], கே. ஞானேஸ்வரி [087765/ஏ], எஸ். ஆர். கணேசராஜா [095475/ஏ[, ஆர். பிருந்தா [095477/ஏ], ஏ. கனகசபை [101069/ஏ], எஸ். அன்பழகன் [101118/ஏ], ஏ. விமலா [101166/பி], ரி. கமலநாதன்[101165/பி], ஆர். வேலுப்பிள்ளை [100774/ஏ], ஆர். சி சர்மா [101139/ஏ].

டபிள்யு. வித்தியா [101144/சி]. டபிள்யு. விவேகாளர் [101144/பி], எஸ். நாகேஸ்வரி [100983/ஏ], எஸ். செல்வசுலோசினி [100983/பி], ஜி பிரபாகர் [101031/ஏ], எஸ். நளினி [100983/சி]. டபிள்யு. சிறியவதி [101144/ஏ]. ஏ. நர்மதா [101166/ஏ], எஸ். எம். கோவிந்தராஜா [087993/பி], எஸ் கோகுலன் [101104/சி].

எஸ். ராஜேந்திரா [101208/ஏ], கே. மலராவதன் [098302/ஏ], எம். யோகரட்ணம் [101177/ஏ] யு. அருணாசலம் [101156/ஏ]. எஸ். ஜெகன் [101178/ஏ[, கே. ராஜேஸ்வரி [095293/ஏ], ஐ அருதாசலம் [100816/ஏ], ஏ. குமாரேஸ்வரன் [098284/ஏ] எஸ். ஆனந்தராஜா [093661/ஏ]. பி. செல்வேந்திரராணி [095318/ஏ].

பி. சுகந்தினி (095318/பி), ஏ. ராமலிங்கம்(100901/) ஏ, எஸ். செல்வராஜா(101104/ஏ), எஸ். சாந்திகுமாரி (101104/பி), கே. தங்கமுத்து (098345/பி), என். விநாயகமூர்த்தி (100851/ஏ), கே. பி. ஆனந்த நடேசன் (088010/ஏ). எஸ். அபிராமி (093666/ஏ), எஸ் சந்திரகுமார் (100943/ஏ). ஏ. கனகரட்ணம் (098345/ஏ),

ஏ. நர்மதா (092138/ஏ), குகன் நாகரட்ணம் (102745/ஏ), கங்காபதி (098226/ஏ), கே. ஜெயபாஸ்கர் (095293/பி), ரி. செல்வராஜ் (098233/ஏ), எஸ். லோகியன் (101104/இ), சி. ரங்கநாயகி (087993/சு) பி இன்பராணி (100818/பி), ரி. தேசினி (100818/சி) ஜே. ராதாகிருஷ்ணன் (091194/சி)

ஜே. ஜெயகௌரி(091194/பி), கே. குணசெளந்தரி (091194/ஏ). பி. ஜெயசீலன் (098314/ஏ) வி செல்வரட்ணம் (089970/ஏ), கே. கணபதிப்பிள்ளை (098380/ஏ), கே. பிரமசிவம் 100772/சி), வி. சக்திவேல் (087937/ஏ), ஆர். சிவஞானம் (087663/ஏ] சி. சுதாகரன் (101192/ஏ), எஸ். ஆனந்தன் (036758/இ),

எஸ். சிவபாலசிங்கம் [100890/ஏ). வை. வாகீசன் (101231/பி), ஏ. மனோமணி (098142/பி), ஜி. தயாவதி (098348/சி), ரி. ஆசீர்வாதன் (097989/ஏ), ஏ. லோரீடெஸ் [097989/பி], கே. என் ராஜகுமாரி [095367/ஏ] சி. ஜெயநந்தன் (091985/ஏ), எம். சாரததேவி [097929/ஏ), ஏ. கே. தேவநாயகி [091929/பி],

வை. திருமாறன் (100957/ஏ), வி. இந்திரா (098142/ஏ), எம். பரமசிவம் (100772/பி). எஸ். மதனியா (1011041 எவ்), வி மகேஸ்வரி (0925841/ஏ). ரி. சிவணேசன் (101136/ஏ). ஆர். அன்னலக்ஷ்மியம்மா (1009 8/ஏ), பி. நடராஜா (101137/ஏ), பி. ஜெயக்குமார் (100908/பி). ஏ. பரமசிவம் (100772/ஏ)

கே. தவகுமார் (078335/ஏ) ஏ. தீபா (093661/சி) கே. உதயகுமார் (100993/ஏ) எஸ். ஆர். துரைசாமி (101229/ஏ), ஜே. பிரசன்னா (087991/ஏ), வி. பகீரதன் (087967/ஏ). டி. நகுலேஸ்வரி (101229/பி), வை. வாமலேஸ்வரி (1012311 /ஏ), கே. கோபாலகிருஷ்ணன் (098348/பி). எஸ். செல்வராணி (100850/ஏ)

எஸ் தனபாலசிங்கம் (092120 /ஏ) ரி. பாலசுப்பிரமணியம் [093548/சி), பி. தமயந்தி (098049/ஏ)' ரி. தவமணி (101091/ஏ), ரி ராஜமோகன் (100804/பி). ஆர். ராஜகுமார் [101091/பி), எஸ். ரி. வைத்தியானந்த சர்மா (098107/ஏ). என் சாருமதி (098050/ஏ). எஸ். கனகராசா (100782/ஏ). என். பாஸ்கரன் [095133/ஏ)

ஏ. ஸ்ரெய்ன் [093661/பி], எஸ். சிவகுமார் [098076/ஏ), எஸ் பசுபதி [098171/ஏ], எஸ். வைத்தியநாதசர்மா 0981971/பி]. எஸ். சுந்தரமூர்த்தி (101053/ஏ). ஆர். நாகராஜா [100804/ஏ]. ரி. கனகசபை [098332/ஏ] ஏ. தங்கரட்ணம் [100822/ஏ] எஸ். மங்கையற்கரசி (100828 / பி], ரி புவணகாந்தன் [100863/ஏ].

பி. ராஜேஸ்வரி 100786. /ஏ.) கே. ராஜகுமாரி(100875/ஏ). யு எம். சர்மா (089671/ஏ), சி. சுந்தரமூர்த்தி (098371/ஏ). ரி. கந்தசாமி (100860/ஏ). கே. வாசீசர் (092125/பி), பி. ஜெயபாலசிங்கம் (098098/ஏ), என். சாந்தகுமார் (092142/ஏ), ரி. சந்திரலிங்கம் (095148/ஏ), சுஜாதினி (100989/ஏ).

ஏ. விமலா (092138/பி) பி. அற்புதகுமார் (098083/ஏ) பிஜசூரியா (100928/ஏ). டபிள்யு. சோமசுந்தரம் (092038/ஏ) ஏ. பசுபதி (093755/ஏ). என். தர்மராசா (092104/ஏ), வி. இந்திரன் (098302/பி), எஸ். நவரட்ணராஜா (093650/ஏ), கே. தனபாலசிங்கம் (093583/ஏ), எம். நாகரட்ணம் (098348/ஏ).

எஸ். அலந்தினி (092938/பி), பி நாகம்மா (093562/ஏ), பி பத்மநாதன்(093741/ஏ), கே. இந்துமதி (093667/ஏ), கே. எஸ். கார்த்திகேசு (091906பி), பி. சிதம்பரப்பிள்ளை (091299/ஏ), எஸ். ஸ்ரீலலிதா (098147/சி), எஸ். கோபாலகிருஷ்ணன் (092086/ஏ). எஸ். குணசேகரம் (098170/டி), எஸ் சந்திரமோகன் (100841/ஏ).

வின். வரதராசா (092058/ஏ), எஸ். பார்வதி (09278/பி), எஸ். கந்தையா (092078/ஏ), எஸ். கணேஸ்வரி (095116/ஏ). எம். ஜெயலக்ஷ்மி (092072/ஏ), கே. பி ஆனந்தாசன் (098110/ஏ). எஸ். பரமேஸ்வரி (098042/ஏ). எஸ். வசந்ததேவி (091995/ஏ), எஸ். சாந்தி (095110/பி), ஏ. பாலமயூரன் (093827/சி)

ஏ. பிரியங்கா (093827/பி), பி. பத்மினி (093827/ஏ), ரி. அலெக்சாண்டர் (095390/ஏ)

### சண்டிலிப்பாய்

பி. செல்லையா (095528/ஏ), எஸ். துரைராஜா (103347/ஏ). என். கஜேராஜ் (101433/ஏ), கே. கிரிசாந்தி (099636/சி), என். சிவநாதன் (095675/ [illegible] (096352/ஏ), டபிள்யூ. கதிரேசு (095527/ஏ). எஸ். ரதிபவானி (101972/பி), ஆர். அருள்நாதம் (101997/ஏ).

கே. நடராஜன் (096370/ஏ), வை. கிரிஸ்ரியன்(095641/ஏ), கே. சிவசோதி (099636/பி). எம் பரமேஸ்வரன் (101376/ஏ), ஏ குணசிங்கம் (096352/ஏ), ரி. சிவராஜன் (094436/ஏ), ஏ. பி அந்தோனிப்பிள்ளை (096381/ஏ). டபிள்யூ கதிரேசு (095527/பி). பி. முருகேசு[101418/ஏ). எஸ் சிவராமன் (099124/ஏ.)

ஆர். செபஸ்ரியாம்பிள்ளை (099221/ஏ), ரி சாரதாவதி (094436/பி). ஏ. செபஸ்ரியாம்பிள்ளை (099221/பி), டாக்டர் டி. குணராஜசிங்கம் (089605/ஏ), என். இரத்தினம் (099222/ஏ), டி குணராஜசிங்கம் (089621/ஏ), ஐ அருணராசா (102008/ ஏ). டி. சரஸ்வதி (102142/ஏ). ஐ ஞானம்மா (099222/பி). டாக்டர் எஸ் பரமநாதன் (097339/ஏ).

எஸ். ரத்தினம் (101931/ஏ), கே. அரிகரன் 092550/சி), ஏ கமலமதி(099139/ஏ), எம். அப்புத்துரை (099139/பி), கே. அப்புத்துரை (099139/சி) எஸ். பரமநாதன் (079906/ஏ) ஆர். ஆனந்தராசா (099263/ஏ). எஸ். சந்திரகுமாரன் (097434/ஏ) எவ் எவ் துரை (099282/ஏ). பி. போ[illegible]ணம் (097357/ஏ),

எம். விகிலந்தன் (102591/ஏ). ஆர். ஜெ[illegible] (095568/ஏ), எம் சந்திபேந்திரன்(091696/ஏ). ஜி. சி செர்பேசிட்(099104/ஏ), என். வேதநாயகம் (099211/ஏ), ஐ நாகலிங்கம் (100076/ஏ), என் சிவராஜி 099171/பி), எம் புஸ்பராணி(OCCCA/AIR/0081/பி), டாக்டர் என். கனகரட்ணம் (OCCCA / ARI/0081/ஏ). என். ஆசை (099163/ஏ),

ஏ. தேவதயாளன் (OCCCA/AIR/0025/ஏ), எல். செல்வகுமார் (099785/ஏ), எஸ். புஸ்பராஜா (100222/ஏ), எஸ். தனலட்சுமி (099640/ஏ), என். சுரேஸ்குமார் (096440/ஏ). என். கமலாம்பிகை (093262/ஏ), எஸ் சதா (101421/பி). எம். வேலுப்பிள்ளை (099124/பி), ஏ மகாலிங்கம் (099211/பி) ஆர் தயாளன் (08245 /ஏ) கே. காந்தராசா (100222/ஏ), கே. சரோஜாதேவி (087138/ஏ), கே. ஜீவன் (087138/பி), கே. கஜினா (087138/சி), கே. விநாயகமூர்த்தி (101383/ஏ), கே. வைத்தியலிங்கம் (096345/ஏ). எஸ் சுரேஸ் 100145/ஏ). வி. மங்களேஸ்வரன்(092486/ஏ), ஏ. செல்வராஜா(101972/ஏ). டபிள்யு. செல்வராசா (094467/ஏ),

ரி சவரிமுத்து (101421/ஏ), ரி. சுதர்மி (103347/டி), எஸ். சுசாந்தினி (091696/பி), எஸ். சரத்சந்திரன் (094617/ஏ), கே ஈஸ்வரன் (094718/ஏ), எஸ் கலைமகள் (102015/ஏ). எஸ் ராசமணி (102026/ஏ). கே. பாலசுப்பிரமணியம் (102015/பி), கே. காஜீசன் (102015/சி), ஏ. நடராசா (101277/ஏ),

கே. உதயகுமார், (102019, ஏ). என் முத்துலிங்கம், 102056ஏ). எஸ் முத்துலிங்கம். (102056/பி), கே. அஜந்தா, (100106/ஏ). எஸ். சந்திரகுமார், (097434/ஏ) கே. லலிதா (094735/டி). ரி. சுதர்சிகா (103347/சி). ரி. சுந்தரசன் (103347/ஏ), எஸ். விஜயகுலசிங்கம் (094788ஏ), கே ராஜேஸ்வரி (094789/ஏ[

கே. தம்பிப்பிள்ளை (099636/ஏ). வி. தங்கராஜா (094809/ஏ) எஸ் இரத்தினாம்பாள் 094441/ஏ) என். சிவயோகி (096413/ஏ). பி. அவருகாமி (094844/ஏ), ஏ பதுவைநாயகம் (094844/பி) என் தேவராசா (094849/ஏ). எஸ். தெம்பமலர் (099729/ஏ] கே. திருநாவுக்கரசு 102138/ஏ). ரி. மகேந்திரன் (094531/சி),

வை. சின்னத்துரை (101944/ஏ, வி மண்டலேஸ்வரன் (101354/ஏ) எம். கல்யாணி (101354/பி), எஸ். சிவஞானி (096469பி), எஸ். சிவநந்திரன் (096469/ஏ), ஏ கந்தசாமி (101266/ஏ). ஆர். செல்வகுமார் 097316/பி) எஸ் சங்கீதா (100106/பி). என். சண்முகராசா(097323/ஏ), ஆர் மகேந்திரன் (094531/பி),

வி. சின்னராசா (099789/ஏ). எஸ் ராமநாதன் (099777.ஏ], ஏ. துஸ்யா [099767/ஏ]. எஸ் ராஜதுரை [097331/ஏ]. ஆர். கணேஸ்வரி. 100107ஏ], ஆர். சுதர்சினி [100197/பி]. ஆர் சுரேஷ்0100107/சி) ஆர். சுதர்சன் 100107/டி) சுரோஜினி [094735/ஏ]. ஏ. கந்தையா [094735/பி]. கே. சிவபிறை [094735/சி] என். பாஸ்கரன் [099663/ஏ) (தொடரும்)

---

மீள்குடியேற்ற பணிமனைக்கு

## பழுதான நிலையில் வந்த போட்டோ பிரதி இயந்திரம்

யாழ்ப்பாணம், மே 31

வடபகுதி மீள்குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் யாழ் மாவட்ட இணைப்பாளர் அலுவலகத்திற்குரிய போட்டோப் பிரதி இயந்திரம் ஒரு வருடத்தின் பின்னர் பழுதடைந்த நிலையில் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

1998 ஜூன் மாதம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பதற்கென கொழும்பிலுள்ள யாழ். செயலக இணைப்பாளர் அலுவலகத்தில் இந்த இயந்திரம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

ஒரு வருடத்திற்குப் பின் அது கடந்த மார்ச் மாதம் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பழுதடைந்த நிலையில் வந்து சேர்ந்த போட்டோப் பிரதி இயந்திரம் யாழ். செயலகத்திலுள்ள வடபகுதி மீள் குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் யாழ். இணைப்பாளர் அலுவலகத்தில் தற்சமயம் பயன்பாடின்றி முடங்கிக்கிடக்கிறது.

(ஐ—5)

## மாணவருக்கு பால் வழங்கும் வைபவம்

தென்மராட்சி, மே 31

பளை மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தினரால் பால் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும்.

சேவாச்சிரம தலைவர் சுவாமி சித்ரூபானந்தா பால் வழங்கி நிகழ்வினை ஆரம்பித்து வைப்பார்.

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயம் பற்றிய படக்காட்சியும் அன்றைய தினம் மாணவர்களுக்குக் காண்பிக்கப்படுமென கல்லூரி அதிபர் க. குணபாலசிங்கம் தெரிவித்தார்.

(ஐ-117)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சட்டவிரோதமாக

# மரங்கள் வெட்டுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க முடிவு

யாழ்ப்பாணம், மே 31

சங்கானை, சண்டிலிப்பாய், மாதகல், சில்லாலை, சுன்னாகம், அளவெட்டி ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளில் இருந்து சட்டவிரோதமாக மரம் வெட்டுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளில் மக்கள் மீளக்குடியமராத வீடுகளில் இருந்து கதவு, யன்னல் போன்றவற்றையும், மரங்களையும் வெட்டி விறகாகக் கடத்தும் பணியில் பலர் ஈடுபட்டு வருவதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாக அந்தப் பகுதி பிரதேச சபைத் தலைவர்கள் தெரிவித்தனர்.

வலி. மேற்கு, வலி. தென் மேற்கு, வலி. தெற்கு பிரதேச சபைகளின் தலைவர்கள் இது விடயத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

[இ-3-135]

# இளைஞர், யுவதிகளுக்கு சுகாதாரப் பயிற்சி

வலி. வடக்கு மே 31

யாழ். சுகாதார திணைக்களத்தினால் படித்து விட்டு இருக்கும் ஆயிரத்து 200 இளைஞர், யுவதிகளுக்கு சுகாதாரப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இதற்கான தொண்டர்கள் பிரதேசசெயலாளர்பிரிவு மட்டத்தில் கிராம அலுவலர்களினால் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர்.

இவர்களுக்கான விரிவுரைகள் அடுத்த மாதம் பகுதி பகுதியாக நடத்தப்படவுள்ளது.

இவர்கள் ஆரம்ப சுகாதார நடவடிக்கையில் கிராம மட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

(இ-86)

# நுளம்பு குடம்பிகளை அழிக்க குளங்களுக்கு மருந்து விசிறல்

நெல்லியடி, மே 31

குளங்களில் உருவாகும் நுளம்புக் குடம்பிகளை அழிப்பதற்காக, பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர், வடமராட்சிப் பகுதியிலுள்ள குளங்களுக்கு ''அபேட்'' என்னும் தொற்று நீக்கி மருந்தை விசிறி வருகின்றனர்.

வடமராட்சிப் பகுதியில் அண்மைக் காலமாக, மலேரியாக் காய்ச்சலினால் பாதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனாலேயே இத் தொற்று நீக்கி மருந்துகள் குளங்களுக்கு விசிறப்படுகின்றன.

வடமராட்சிப் பகுதியில் வல்லிபுரக்குறிச்சி, துன்னாலை, கரவெட்டி, கரணவாய் ஆகிய பகுதிகளிலுள்ள குளங்களுக்கே, 'அபேட்' மருந்து விசுறும் பணி கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப்பணி அடுத்த மாதம் நடுப்பகுதி வரை, மேற்கொள்ளப்படுமென்று பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் தெரிவித்தனர்.

(ஜ-109)

# 60 குடும்பங்களுக்கு இலவச திருமணப் பதிவு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கைதடிப் பகுதியைச் சேர்ந்த இதுவரை திருமணப் பதிவு செய்யாத 60 குடும்பங்களுக்கு இலவசத் திருமணப் பதிவை நடத்தி வைக்க உள்ளது.

ஜூன் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இது தொடர்பான வைபவம் இடம்பெறும்.

யாழ். மாவட்ட மேலதிக பதிவுகாரரர் சதாசிவ ஐயர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு தென்மராட்சிப் பிரிவு பதிவுகாரரர் எஸ் மோகனராஜலிங்கத்தின் உதவியுடன் திருமணப் பதிவுகளை மேற்கொள்வார் என கழகச் செயலாளர் லயன் அ. பொ. செல்லையா தெரிவித்தார்.

கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் இந்த திருமணப் பதிவின் பின் பெரும்பாக மேலதிக பதிவுகாரர் முன்னிலையில் மாலை மாற்றல், மோதிரம் மாற்றல் மங்கலநாண் பூட்டல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

# தென்னை நாற்றில் அதிசயம்

யாழ்ப்பாணம், மே 31

நாற்று மேடையில் முளைகொண்டு 3 மாதங்களேயான தென்னம் நாற்று ஒன்று பாளை விட்டு மூன்று குரும்பைகளும் கட்டியுள்ளது.

சுன்னாகம் கந்தரோடையில் எம். ஸ்ரீதரன் என்பவருடைய வளவிலேயே இந்த அதிசயம் நிகழ்ந்துள்ளது.

முளைகொண்டு மூன்று வித்திலைகள் மட்டுமே உள்ள இந்த செவ்விளநீர் நாற்றின் மூன்று இலைகளுக்கும் இடையே பாளை தோன்றி உள்ளது.

(ஐ-15)

# விதவைகளான பெண்கள் விவரம் திரட்டப்படுகிறது

வலி. வடக்கு, மே 31

யாழ். மாவட்டத்தில் விதவைகளாக இருக்கும் பெண்கள் பற்றிய விவரம் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் சேகரிக்கப்பட்டு வருகின்றது.

பிரதேச செயலாளர் மட்டத்தில் 16 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட விதவைகள் பற்றிய விவரங்கள் கிராம அலுவலர்களினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பெண்களுக்கு இந்த நிறுவனத்தினால் சுயதொழில் முயற்சிகளில் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களுக்கு தொழில் முயற்சிக்கான உதவிகளும் செய்யப்படவுள்ளன.

[இ-86]

# ஸ்ரீரங்கன் ஆலய கோபுரம் குறித்து தெற்கில் சர்ச்சை

கொழும்பு, மே 31

தமிழ்நாடு திருச்சிராப்பள்ளியில் உள்ள ஸ்ரீரங்கன் ஆலயக் கோபுரம் இலங்கையை நோக்கி இருப்பதே இலங்கைக்குத் தீய விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாக கொழும்பில் அரசாங்க அதிகாரிகள் மத்தியில் கருத்து நிலவுகின்றதாம்.

இதன் காரணமாகவே யுத்தம் உட்பட நாட்டில் பிரச்சினைகள் தீர்வு இன்றி தொடர்வதாக கூறப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி ஸ்ரீரங்கன் ஆலய கோபுரம் இலங்கையை நோக்கி இருப்பதால் ஏற்படும் தீய விளைவுகளை இல்லாது ஒழிக்க முத்துராஜவெலவில் விஷ்ணு ஆலயமொன்றை திருச்சிராப்பள்ளி ஸ்ரீரங்கன் ஆலயத்தை நோக்கியதாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாம்.

1997 பெப்ரவரி மாதம் இந்த ஆலயத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள போதிலும் நிதி நெருக்கடி காரணமாக அது சாத்தியப்படவில்லை என்றும்—

இதற்கு தேவைப்படும் நிதியான ஒரு கோடி ரூபாவை வர்த்தகர்களிடமிருந்து அன்பளிப்பாகத் திரட்டும் நடவடிக்கைகளில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த ஈடுபட்டுள்ளார் என்றும் — தெரியவருகின்றது.

[இ-21]

# 15 வருட இராணுவ ஆட்சி நைஜீரியாவில் முடிவு

அபிஜான், மே 31

நைஜீரியாவின் 15 ஆண்டு கால இராணுவ ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு ஜனநாயக ஆட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவ ஆட்சியாளரும் பெப்ரவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றவருமான ஒலு செகுஷ் சன்யோ கடந்த சனிக்கிழமை சம்பிரதாய பூர்வமாக பதவி ஏற்றதைத் தொடர்ந்து நைஜீரியாவின் இராணுவ ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

'அரச நடவடிக்கைகளில் இனியும் இராணுவத் தலையீடு நாகரிகமாகாது என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன். ஆகவே ஜனநாயக ஆட்சிக்கு ஆதரவை வழங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்தஆண்டிலிருந்து புதிய அடையாள அட்டைகள்!

## ஆள் பதிவுத் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 31

தற்போது பாவனையிலுள்ள தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக புதிய அடையாள அட்டையை அடுத்த ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்த ஆள்பதிவுத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

பாதுகாப்புப் பிரிவின் ஆலோசனையுடன் நவீன தொழில் நுட்பத்தைக் கொண்டு உருவாக்கப்பட உள்ள இந்த அடையாள அட்டைகள் இலகுவில் மாற்றம் செய்ய முடியாதவை என்றும்—

இதன் மூலம் மோசடிகளைத் தவிர்க்க முடியும் என்றும்— ஆள்பதிவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புதிய அடையாள அட்டையை வடிவமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

(இ-ரி)

# [illegible] முறிந்து மின்சாரம் தடை

நெல்லியடி, மே 31

புலோலி கிழக்கு சந்தா தோட்டம் பகுதியில் கடந்த சனிக்கிழமை வீசியகடும் காற்றினால் பனைமரம் ஒன்று முறிந்து மின்கம்பத்தின் மேல் வீழ்ந்ததனால் மின் கம்பம் முறிந்து மின் வயர்களும் அறுந்தன.

இதனால் இந்தப் பகுதியில் இரவில் மின்சாரம் தடைப்பட்டது.

(இ-109)

# அறிவுப் புதிர் போட்டி

நெல்லியடி, மே 31

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் இளைஞர் கழகங்களுக்கிடையே தெரிவுசெய்யப்பட்ட இளைஞர்களுக்கான அறிவுப்புதிர்ப்போட்டி இன்று திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு பருத்தித்துறையிலுள்ள இளைஞர் சம்மேளன அலுவலகத்தில் நடைபெறும்.

[இ-109]

# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, மே 31

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழா நடைபெறும்.

இந்த நிகழ்வில் சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

[ஐ-30]

★ ★ ★

மந்திகை கண்ணகைஅம்மன் கோயிலில் வருடாந்தப் பொங்கல் உற்சவ விழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

பொங்கல் உற்சவத்தை ஒட்டி சிலம்பயாழி, உட்படப் பல வீரதீரச் செயல்கள் இடம்பெறும்.

[[illegible]]

# விசேட அ. அட்டைக்கு விண்ணப்பிக்க யாழ். குடாநாட்டுக்கு வந்ததற்கான ஆவணங்களும் கோரப்படுகின்றன

வலி மேற்கு, மே 31

விசேட அடையாள அட்டைக்குப் புதிதாக விண்ணப்பிப்போர் யாழ். குடா நாட்டுக்கு வந்த மார்க்கத்தின் ஆவணங்களையும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

யாழ் குடாநாட்டில் விசேட அடையாள அட்டையை 10 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து முறைப்பாட்டுப் பிரதியைக் கொண்டு வந்தாலும் புதிதாக விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியாது எனத் தெரியவருகின்றது.

வெளிமாவட்டங்களில் இருந்து யாழ். குடாநாட்டுக்கு மீளக்குடியமர வருவோர் விசேட அடையாள அட்டைக்குப் புதிதாக விண்ணப்பிக்கும்போது கப்பல் மூலம் வந்தவர்கள் கப்பலில் வந்த அனுமதிச் சீட்டையும், விமானம் மூலம் வந்தவர்கள் விமானச் சீட்டையும், குருநகர் கடல் ஏரிவழியாக வந்தவர்கள் குருநகர் இராணுவ முகாமில் இருந்து வெளியேறும்போது வழங்கப்படும் அனுமதிச் சீட்டையும் விசேட அடையாள அட்டைக்கான விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவின் கிராம உத்தியோகத்தர்கள் மேற்படி ஆவணங்களின் நிழற்பிரதியை விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது கொண்டு வருமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

[இ-175]

# சீரற்ற மின்சார விநியோகம்

நெல்லியடி, மே 31

மந்திகைமருத்துவமனைக்கு ஜெனரேற்றர் மூலம் வழங்கப்படும் சீரற்ற மின்சார விநியோகத்தினால் மந்திகை மருத்துவமனையில் மோட்டர்கள் பழுதடைகின்றன. குளிர் சாதனப் பெட்டிகளும் இயங்க முடியாத நிலைமை ஏற்படுகின்றது.

மந்திகை மருத்துவமனைப் பகுதிக்கு இலங்கை மின்சார சபையால் 24 மணி நேர மின்சாரம் வழங்கப்படுமிடத்து இந்த குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படலாம் என வைத்திய [illegible] தெரிவித்தனர்.

[இ-109]

# மருந்து விநியோகம்

திருநெல்வேலி, மே 31

இவ் வருட இரண்டாம் காலாண்டுக்கான மருந்து வகைகள் நாளை முதலாம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணி வெற்றி

லண்டன், மே 31

இங்கிலாந்தில் நடைபெறும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இந்தியா அபாரமாக ஆடி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் நேற்று முன்தினம் நடைபெற்று மழை காரணமாக இடைநிறுத்தப்பட்ட ஆட்டம் நேற்றுத் தொடர்ந்தது.

இந்தியப் பந்து வீச்சாளரின் அபாரப் பந்து வீச்சுக்காரணமாக 45 2 ஓவர்களில் இங்கிலாந்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது. இந்தியா 63 ஓட்டங்களால் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவாகியுள்ளது.

ஸ்கோர் விவரம்; இந்தியா 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 232 ஓட்டங்கள், இங்கிலாந்து 45.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 169 ஓட்டங்கள். (இ-3:ரீ)

# நஷ்டஈட்டுப் படிவங்களை பெற முடியாத நிலைமை

யாழ். குடாநாட்டில் சேதமடைந்த பல ஆலயங்களுக்கு பிரதேசசெயலகங்களில்நஷ்ட ஈட்டு படிவங்களை பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில்ஏராளமான ஆலயங்கள் கடந்த கால வன்செயல்களின் போது சேதமடைந்தன.

## ஆலய பதிவு வேண்டுமாம்

தற்போது சேதமடைந்த ஆலயங்களைத் திருத்தி அமைப்பதற்கான நஷ்டஈட்டு படிவங்கள் விநியோகிக்கப்படுகின்றன. இந்தப் படிவங்களை இந்து சமய கலாசார அமைச்சில் பதிவு செய்த ஆலயங்களுக்கு மட்டுமே விநியோகிக்க முடியும் என பிரதேச செயலகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சேதமடைந்த பல ஆலயங்கள் படிவங்களை பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. [இ-175]

## திருமலையில்

# மீன்பிடி தடையை அகற்ற மீனவர்கள் கோரிக்கை

திருகோணமலை, மே 31

திருகோணமலைக் கடற்பகுதியில் மீன் பிடிக்க விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டும் என்று திருமலை மீனவர் சங்கங்கள் கடற்றொழில் அமைச்சர் இந்திகா குணவர்த்தனவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

திருகோணமலை கடற்பிரதேசத்தில் காலை 5 மணி முதல் மாலை 5 மணி வரையே மீன்பிடிக்க முடியும் என்று கடற்படையினர் அண்மையில் அறிவித்திருந்தனர்.

இந்தத் தடை காரணமாக மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் — மீன் பிடிக்க விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கவேண்டும் என்றும் — அமைச்சரிடம் கோரப்பட்டுள்ளது.

தொழில் பாதிப்புக்காக நிவாரணம் வழங்கவேண்டும் என்றும் மீனவர்கள் கோரியுள்ளனர். [இ-3]

## வெற்றிட விவரம்

வலி.வடக்கு, மே 31

யாழ். மாவட்டத்தில்திடீர் மரணவிசாரணை அதிகாரிகளுக்கு இருந்து வரும் வெற்றிடம் பற்றிய விவரங்கள் அரச அதிபரினால் சேகரிக்கப்படுகின்றன. [இ-86]

# 50 பாடசாலைகளுக்கு ஜி.ரி.இஸட் உதவி

வலி. கிழக்கு, மே 31

யாழ். மாவட்டத்திலுள்ள 50 பாடசாலைகளில் உள்ள மலசல கூடங்களைப் புனரமைக்க ஜி.ரி.இஸட் நிறுவனம் கட்டடப் பொருள்களைப் பாடசாலைகளுக்கு வழங்கி வருகின்றது.

ஜி.ரி.இஸட் நிறுவனத்தினர் யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் விவரங்களைப் பெற்று 50பாடசாலைகளைத் தெரிவு செய்து இதற்கான கட்டடப் பொருள்களை வழங்கி வருகின்றனர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க உதவியுடன் இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-180)

## ஒலிபெருக்கிப் பாவனைக்கு

# 14 நாள்களுக்கு முன் விண்ணப்பிக்க அறிவிப்பு

வலி கிழக்கு, மே 31

ஒலிபெருக்கி அனுமதி பெறும் பொதுமக்கள் தமது அனுமதிக் கடிதத்தை நிகழ்வுக்கு 14 நாள்களுக்கு முன் சமர்ப்பிக்குமாறு கோப்பாய் பொலீஸ் அதிகாரி கேட்டுள்ளார்.

மரண அறிவித்தல் நிகழ்வுகள் தவிர்ந்த ஏனைய நிகழ்வுகள் முன்கூட்டியே தீர்மானிக்கப்படவேண்டியவை என்றும்—

இதனால் 14 நாள்களுக்கு முன்னரே, ஒலிபெருக்கி உரிமையாளரின் முழு விவரமும் அடங்கிய கடிதத்தோடு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. [இ-180]

## பழைய மாணவர் சங்கம உதவி

வலி. கிழக்கு, மே 31

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்பு கிளை பாடசாலைக் கட்டடத்துக்கும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் நிதி உதவி வழங்கி உள்ளது.

இந்தப் பாடசாலையின் கணனிப் பயற்சிக்கு புதிய கட்டடம் ஒன்றை நிறுவுவதற்கு 50 ஆயிரம் ரூபாவை பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளை வழங்கி உள்ளது.

இக்கட்டடத்துக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த வருடம் ஜி சீ ஈ உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்றுபல்கலைக்கழகம் சென்ற மாணவர்களில் மூவருக்கு இச்சங்கம் மாதாந்தம் 750 ரூபா பணத்தைகல்வி ஊக்குவிப்பு நிதியாக கடந்த மாதத்தில் இருந்து வழங்கி வருகின்றது.

ஏழுதுமட்டுவாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில்படுகாயமடைந்தவர்கள் ஹெலிகொப்டர் மூலம் பலாலிக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்றும்—

வீதியில் உள்ள பாலமொன்றின் கீழ் வைக்கப்பட்ட குண்டே வெடித்ததாகவும் அறிய வந்தது. [இ-11)

காயமடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்)

போதும்—

40 எம் எம். அளவுடைய— றொக்கட்லோஞ்சர்கள் மூலம் விடுதலைப் புலிகள் குண்டுகளை ஏவியிருக்க வேண்டும் என்று தாங்கள் கருதுவதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் குண்டு வெடிப்புக் காரணமாக அப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்று பெரும் சேதமடைந்ததாகக் கூறப்பட்டது. [இ-3-6-15-117]

மருந்து...

[9 ஆம் பக்கத்தொடர்]

திகதி செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவினால் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை, பருத்தித்துறை அரசினர் மத்திய மருந்தகம், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், அம்பன் அரசினர் மத்திய மருந்தகம், கரவெட்டி அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றிற்கு நேரடியாகத் திணைக்கள வாகனம் மூலம் கொண்டுசென்று வழங்கப்படவுள்ளன.

4 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று குருநகர் அரசினர் வைத்தியசாலை, யாழ். பாடசாலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், கைதடி அரசினர் மத்திய மருந்தகம், சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் பற்சிகிச்சை நிலையம், யாழ். சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவற்றுக்கு மருந்துகள் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளன. (இ-135)

றெலோ...

(முதலாம் பக்கத் தொடர்)

பாக்கிச் சூட்டுச்சத்தங்கள் கேட்டதால் நகரில் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் என்ன என்பது தெரியவரவில்லை. [இ-3-164]

குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இதன் காரணமாக வெளிநாடுகள் இலங்கைக்கு வழங்கும் உதவிகள் குறையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜேர்மன் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்குமூன்று தடவைகள் விஜயம் செய்தனர் என்றும்—

விடுதலைப் புலிகளின் ஊடுருவல், போக்குவரத்து சீரின்மை காரணமாக புனரமைப்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அவர்கள் தெரிவித்துள்ளனர் என்றும்— கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-ரீ)

15 வருட...

[9 ஆம் பக்கத் தொடர்]

குங்கள்' என பதவி விலகும் இராணுவ ஆட்சியாளர் அப்துல் சலாம் அபூபக்கர் ஒபசன்யோவின் பதவி ஏற்பு வைபவத்தில் தெரிவித்தார்.

தலைநகர் அபுஜாவில் ஒபசன்யோவின் பதவி ஏற்பு நிகழ்வு மிகவும் கோலாகலமாகக் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தென் ஆபிரிக்க தலைவர் நெல்சன் மண்டேலா, பிரீட்டிஷ் இளவரசர் சாள்ஸ் உட்பட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். (ஐ-க)

# முதற்கட்டக் கொடுப்பனவு விரைவில் கிடைக்கும்

யாழ்ப்பாணம், மே 31

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் அசையும் அசையாச் சொத்துக்களுக்கான இழப்பீடு கோரியவர்களுக்கு முதலாவது கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலாவது கொடுப்பனவுக்கான வவுச்சர் அவ்வப் பிரிவு கிராமசேவகர்களினால் உரியவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு உரியவர்களின் கையொப்பம் பெறப்பட்டு மீளப்பெறப்பட்டுள்ளது.

இந்த வவுச்சர்களுக்கான கொடுப்பனவு விரைவில் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த கொடுப்பனவுத் தொகை வங்கிக்குவந்துசேர்ந்ததும் உரியவர்களுக்கு அறிவிக்கப்படும்.

முதலாம் கட்ட கொடுப்பனவு பூர்த்தி அடைந்தவுடன் இரண்டாம் கட்டக் கொடுப்பனவான 7 ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. [இ-15]

# 50 குடும்பங்களுக்கு இலவச தென்னங்கன்று

தென்மராட்சி, மே 31

பளைப் பிரதேசத்தில் தென்னை உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினர் நல்ல இன தென்னங்கன்றுகளை இலவசமாக விநியோகித்துள்ளனர்.

நேற்று முன்தினம் பளை மத்திய கல்லூரியில் இடம்பெற்ற வைபவத்தில் புலோப்பளை, கச்சார்வெளி, வேம்பொடுகேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கு முதல் கட்டமாக தலா மூன்று தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

தென்னை உற்பத்திக்கான பயிற்சி வகுப்பும் இடம்பெற்றது. [இ-117]

## கௌரவ விருது

செல்வச் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை வைகாசிப் பெருவிழாவை முன்னிட்டு பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளைக்கு ''ஞான பண்டித சேவா சுரபி'' என்ற விருதினை வழங்கிக் கௌரவித்துள்ளது.

இந்த விழா பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் நடைபெற்ற போது நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்.

# 65 உணவு லொறிகளே கடந்த மாதம் வன்னிக்கு!

வவுனியா, மே 31

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு கடந்த மாதம் 176 லொறி உணவுப் பொருள்கள் சென்றிருக்கவேண்டும். ஆனால் 65 லொறிகளில் மட்டுமே உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

கிளிநொச்சி லொறி உரிமையாளர் சங்கத் தலைவர் சி. க. ராஜரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதிய உணவுப் பொருள்கள் அங்கு எடுத்துச் செல்லப்படாததால் அங்குள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் —

பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும்— அவர் மேலும் தெரிவித்துள்ளார். [இ-164-3]

## இளம் பெண் காயம்

யாழ்ப்பாணம், மே 31

கோண்டாவில் பகுதி காங்கேசன்துறை வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற லொறி—சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

சைக்கிளில் சென்றவரான கோண்டாவிலைச் சேர்ந்த யோகநாதன் தர்சினி (வயது 17) என்ற இளம் பெண்ணேபடுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## வரதராஜப்பெருமாள்..

(முதலாம் பக்கத் தொடர்)

இவருக்கு ராஸிக் தலைமையிலான தேசிய துணைப் படை பாதுகாப்பு அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் — ராஸிக்கின் பூதவுடல் காரைதீவிலும்— அவருடன் உயிரிழந்த சந்திரன் ஜெயக்குமாரின் பூதவுடல் தம்பிலுவிலும்— தகனஞ் செய்யப்பட்டன (இ-21-3)

## அரசப்பன்...

(முதலாம் பக்கத் தொடர்)

மரண விசாரணை அதிகாரியின் உத்தரவின் பேரில் அவை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பதற்காகச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன என்றும் —

பின்னர் அவற்றைப் பொறுப்பேற்ற செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகள் அவற்றை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

எனினும் புலிகள் தரப்பில்இருந்து இது குறித்து தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (இ-21-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31-05-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org